ஞானம் சென்ரர்
இலங்கை
45 நிமிடம்
(விபரங்கள் 21-ம் பக்கம்)



Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 5 11 — 17 மார்ச் 1999 முழக்கம்: 217



Gnanam Center




ஐரோப்பா எங்கும் எமது கிளை ஸ்தாபனங்கள் ஆரம்பமாகியுள்ளன. விபரங்கள் உள்ளே


## மதுரையில் எழுச்சி மாநாடு

# விடுதலைப்புலிகளை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்

## 72 இந்தியக் கட்சிகள் கூட்டு வேண்டுதல்

* பிரபாகரன் அனைத்துகட்சி ஆதரவை வேண்டுகின்றார் - நெடுமாறன்
* ஐ.நா. சபை மூலம் தமிழீழம் மலரவேண்டும் - மதுரை ஆதீனம்

(08.03.1999)

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 72 அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பான தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு எழுச்சிகரமான ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டை நேற்று மதுரையில் நடாத்தியது. மதுரை தமுக்கம் மைதானத்தில் இடம்பெற்ற இம்மாநாட்டினை மதுரை ஆதீனம் தொடக்கி வைத்து எழுச்சிகரமான உரையை ஆற்றினார். அவர் தனது உரையில், ஈழத்தமிழர் பிரச்சனையை ஐநா சபைக்கு கொண்டுசென்று தமிழீழம் பெற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இதுவே ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பான கடைசி மாநாடாக இருக்க வேண்டும் எனவும் அடுத்த மாநாடு தமிழீழ வெற்றி மாநாடாக அமைய வேண்டும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர் பழ நெடுமாறன் விரிவான விளக்க உரையை நிகழ்த்தினார். அவ்வுரையில் 1977ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு இன்று 72 இந்தியக் கட்சிகளைக்கொண்ட கூட்டமைப்பாக வளர்க்கப்பட்டுள்ளது எனக் கூறினார். முதலில் 8 அமைப்புக்களையே கொண்ட இக்குழு, தேசிய பாதுகாப்பு சட்டமும், தடாசட்டமும் ஆதரவாளர்கள் மீது விதிக்கப்பட்ட பின்னரே இவ் வியத்தகு வளர்ச்சியை அடைந்தது என்றார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அனைத்து இந்தியக் கட்சிகளினதும் ஆதரவையே நாடினார் எனச் சுட்டிக்காட்டிய அவர், வாஜ்பாய் அரசு ஈழத்தமிழர் தொடர்பாக தெளிவான முடிவை எடுக்க வேண்டும் என்று வேண்டினார்.

(ச 2ம் பக்கம்)

## அனைத்துலக பெண்கள் தினம்

### மாலதி, சோதியா படை மணிகள்

## பரந்தன்-கிளிநொச்சியை பிளந்தன

### ஓயாத அலைகள் 2 பற்றி பெண் புலிகள்

ஓயாத அலைகள் 2 நடவடிக்கையின் போது ஆனையிறவு பெரும் படைத்தளத்தையும் கிளிநொச்சி படைத்தளத்தையும் இணைக்கும் இராணுவ வலையத்தினை பரந்தன் ஊடாக ஊடறுத்து சோதியா படையணியைச் சேர்ந்த குணாவின் அணியும், மாலதி படையணிச் சேர்ந்த லெப்கேணல் செல்வி அணியும் கடும் சமர் புரிந்தனர் என புலிகளின் மகளிர் படையணிகளின் உத்தியோக பூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் அறிவித்துள்ளன.

பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கி பார்க்கும் போது பிரதான வீதிக்கு இடது புறமாக ஊடறுத்துச் செல்ல வேண்டிய அணிகளுக்கு பாதையமைத்துக் கொடுக்கும் முதல் பணியை மற்றுமொரு மகளிர் படைப்பிரிவான மட்டு அம்பாறை பிரிவாகிய அன்பரசி படையணி புரிந்தது. உருத்திரபுரம் பகுதியை சிறப்புத்தளபதி விதுஷாவின் நேரடிக் கட்டளைகளின் கீழ் மேஜர் கனியா, றோசா ஆகிய பெண் தளபதி

(ச 2ம் பக்கம்)


## வணக்கம் தமிழீழம்

## 0087-3761-932798


(07.03.1999)

கடந்த சில வாரங்களுக்கு முன்னதாக வன்னி மக்களுக்கென புதுக்குடியிருப்பில் தொடக்கப்பட்ட செய்மதி தொலைபேசி சேவை தனது இரண்டாவது சேவையினை அக்கராயத்தில் (வன்னி மேற்கு) ஆரம்பித்துள்ளதாக இச் சேவையின் நிர்வாக இயக்குநர் தமிழீழத்தில் இருந்து ஈழமுரசுக்கு அறிவித்துள்ளார்.

இச் சேவைபற்றி ஈழமுரசிற்கு விபரம் தந்த அவர், மல்லாவி, துணுக்காய், முழங்காவில், பூநகரி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் பயன் கருதியே இரண்டாவது சேவையும் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

(ச 2ம் பக்கம்)

## நாவற்குழியில் வெடிகுண்டுவைத்த வயோதிபர்?

(08.03.1999)

இன்றுகாலை யாழ். புறநகர் பகுதியான நாவற்குழியில் அமைந்திருந்த சோதனைச்சாவடியில் குண்டுவெடிப்பொன்று இடம்பெற்றுள்ளது. வெடிகுண்டு மறைக்கப்பட்டிருந்த பொதி யொன்றில் இருந்த குண்டே சோதனைச்சாவடியில் வெடித்து அங்கிருந்த சிறீலங்காப் படையினரை காயப்படுத்தியுள்ளது.

துவிச்சக்கரவண்டியில் வந்த ஒரு வயோதிபரே இப்பொதியை சோதனைச்சாவடியில் வைத்து விட்டுச் சென்றதாக கருதப்படுகின்றது. அவ் வயோதிபரை இராணுவம் தேடிவருகின்றது.


## வன்னியில் ரண கோஷா 10,000 பேர் நிர்க்கதி

(07.03.1999)

சிறீலங்கா இராணுவத்தினர் 'ரணகோஷா' (போர்முழக்கம்) என்னும் குறியீட்டுப் பெயருடன் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையால் செட்டிக்குளம், பூவரசங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 10,000 பேர் தமது வதிவிடங்களை விட்டு இடம்பெயர்ந்து நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

கடந்த 4ம் திகதி காலையில் இவ் இராணுவ நடவடிக்கை

(ச 2ம் பக்கம்)



யாழ். சிறிலங்கா நீதிமன்றங்களிற்கு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளரால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் நகல்பிரதிகள் கொழும்பில் பத்திரிகையாளர் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளது.


உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது

Kumars Shop

S. A. R. L.

80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers

Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.

90, Bld. Rochechouart,

75018 Paris. Mo: Anvers ou Pigalle

Tel: - Fax: 01 42 23 03 10

ou 01 42 59 53 91

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 & 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 339 573 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிர்வாக ஆசிரியர்:
அமரர் க. விஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

இலண்டன்:
Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்:
T. ஸ்ரீரங்கநாத்
Meller vej - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich 5n-55; 8005 Zürich.
Druckerei: Frankreich.
Tel: 0796350216

ஜேர்மனி:
ஜெயக்குமார். - Tel: 0956806145
ஹரி Tel: 07867874177

இத்தாலி:
மகாராஜா
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
குகனேசன்
Tel: 076 5425804


# ஒட்டுசுட்டான்–குஞ்சுக்குளத்தில் புலிகள் அதிரடி - ஆயுதங்கள் மீட்பு

ஒட்டுசுட்டான், குஞ்சுக்குளம் ஆகிய பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மீது இரு வேறான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் கடந்த வாரம் மேற்கொண்டுள்ளனர். இத் தாக்குதல்களில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மேலும் சிலர் படுகாயப்படுத்தப் பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பகுதியில் தடைகளை அகற்ற வந்த இராணுவ அணியொன்று புலிகளின் அதிரடிக்கு இலக்கானது. கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களுடனும், காயப்பட்டவர்களுடனும் இராணுவ அணி பின்வாங்கிச்சென்றது. இத் தாக்குதலின் போது சில இராணுவ தளவாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதே வேளை குஞ்சுக்குளம் பகுதியில் காலை 9.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு தாக்குதலில் இராணுவ நிலைகளில் இருந்த சிப்பாய்கள் மூவர் பலியாகியுள்ளனர். இராணுவ நிலையினை கைப்பற்றிய புலிகள் தன்னியக்க ரக ஆயுதங்கள் உட்பட சில ஆயுத தளவாடங்கள் கைப்பற்றப்பட்டதுடன், கொல்லப்பட்ட ஒரு சிப்பாயின் சடலமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. இத் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

# பொருளாதார இலக்குகளை புலிகள் தாக்கலாம் கொழும்பு தொடர்ந்து உசார் நிலையில்

(08.03.1999)

கொழும்பில் உள்ள பிரதான பொருளாதார இலக்குகளை புலிகள் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக படையினர் சிறப்பு உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என இராணுவ தரப்பை ஆதாரம்காட்டி இக்பால் அத்தாஸ் செய்தி வெளியிட்டுள்ளார். கொழும்பு பாதுகாப்பிற்காக இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் நெவில் டயஸ் கடல்வான் தளபதிகளின் உதவியுடன் இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டு வருகின்றார்.

புலிகளின் அதிரடிப்படை அணியொன்று மேற்கு கடல் மார்க்கமாக கொழும்பை அண்மிய பகுதிகளில் ஆயுதங்களுடனும் வெடிமருந்துகளுடனும் தரையிறங்கியுள்ளதாக சிறீலங்கா உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இதேவேளையில் பிரித்தானியாவில் இருந்து தென்னாசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்த விசேட பாதுகாப்பு அதிகாரிகளை கொண்ட நிபுணர்கள் குழுவொன்று கொழும்பின் நகர்ப்புற பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்வையிட்டதுடன் இது தொடர்பான கலந்துரையாடல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## அனைத்துலக...

கள் படையணிகளை வழிநடத்தி கைப்பற்றின.

புலிகளின் சிறப்பு அதிரடிப் படைப்பிரிவான சிறுத்தைகள் படையணியின் மகளிர் அணித் தளபதி தமிழ்ச் செல்வி தனது வழிகாட்டலில் பல சிங்கள காப்பரண்களை கைப்பற்றியுள்ளார். இதேவேளை கிட்டு படையணியின் மகளிர் படைப் பிரிவு ஆனையிறவு பெரும் தளத்தின் மீது சிறப்புத் தாக்குதலை புரிந்துள்ளன.

மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த தளபதிகளான விதுஷா, துர்க்கா, சுதந்திரா, சஞ்சுகி ஆகியோர் மூவாத அவைகள் 2 பெண்கள் படையணியின் போர் ஆற்றலை அதிகரித்துள்ளது என சுதந்திரப் பறவைகள் ஏட்டுக்கு தெரிவித்துள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வணக்கம்...

சர்வதேச நாடுகளில் இருந்து 0087 3761 932795 ஆகிய இலக்கத்தினூடாக ஸ்கந்தபுரத்திற்கு தொடர்பைப்பெற முடியும். இதேவேளை இச்சேவையில் புதுக்குடியிருப்பில் தொலைநகல் (fax) சேவையும் இடம்பெறுவதாகவும் அதனது இலக்கம் 0087 3761 932760 எனவும் தெரிவித்தார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மதுரையில்...

இன்று சுமார் 25 இலட்சம் ரூபாய்கள் தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்பு குழுவினால் தமிழீழ மக்களுக்காக திரட்டப்பட்டுள்ளது என திரு நெடுமாறனை மேற்கோள்காட்டி தினபூமி ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. 1997ம் ஆண்டு மதுரையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இம் மாநாடு தமிழகப் பொலிசாரினால் தடை செய்யப்பட்டது. தற்போது சென்னை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுடன் மீள இடம்பெறுகின்றது குறிப்பிடத்தக்கது.

(மேலதிக விபரங்கள் 7ம் பக்கத்தில்)

# வவுனியா இராணுவப் பகுதியில் பணிபுரிய பொலிசார் மறுப்பு

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பொலிசாரை சேவைக்கமர்த்துமாறு எடுக்கப்பட்ட முடிவை அடுத்து அப்பகுதியில் கடமையாற்றுவதற்கு 20 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர். வவுனியா மன்னார் வீதியில் இதுவரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட இராணுவத்தினர் அப் பகுதியில் இருந்து எடுக்கப்பட்டு அப்பிரதேசத்திற்கு பொலிசார் அனுப்பப்பட்டனர்.

ஆனால் இப்பகுதியில் பணியாற்றுவதற்கு பொலிசார் பலர் பின்நின்று தமது கடமைகளை பொறுப்பேற்க மறுத்துள்ளனர். அவர்களுள் 20 பொலிசார் தமது பதவி விலகல் கடிதங்களை அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளனர். சேவையில் ஈடுபட மறுத்த இப்பொலிசார் மீது விசாரணைகளை நடாத்துமாறு பொலிஸ்மா அதிபர் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னியில்...

ஆரம்பிக்கப்பட்டது. யுத்த தாயினை சகிதம் நூற்றுக்கணக்கான துருப்பினர் தாம் முன்னேறி நிலைகொண்டிருந்த இடங்களில் இருந்து மன்னார் வவுனியா வீதியூடாக இரணை இலுப்பைக்குளம் பகுதியை நோக்கி எறிகணைகளை வீசியபடி நகரத்தொடங்கினர். படையினருக்கு உதவியாக தாக்குதல் உலங்குவானூர்திகளும் வான் ரோந்தினை மேற்கொண்டனர். இராணுவத்தினரின் கைகளில் சிக்கிக்கொள்ளாது மக்கள் உடனடியாக தமது வதிவிடங்களில் இருந்து வெளியேறி பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர் ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பியிருக்கும் வன்னியில் இப் புதிய இடம்பெயர்வு பெரும் நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது.


இவ் இராணுவ நகர்வின் போது விடுதலைப் புலிகள் எதிர்தாக்குதல் நடாத்தவில்லை எனவும் தெரியவருகிறது.

சிறீலங்கா இணை பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை வன்னிக்கு விஜயம் செய்து அங்கு இராணுவத் தளபதிகளுடன் அவசர ஆலோசனை நடாத்தியுள்ளார். இப் புதிய நடவடிக்கையால் வன்னி - மடு பகுதிகளுக்கு இடையேயான போக்குவரத்துப்பாதை மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.


# மரண அறிவித்தல்

தோற்றம்:
19.04.1930

மறைவு:
06.03.1999



## அமரர் வீரவாகு கனகசபாபதி
(இளைப்பாறிய அதிபர்)

மூளாயைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய அதிபர் வீரவாகு கனகசபாபதி 06.03.1999 சுன்னாகத்தில் காலமானார்.

இவர் காலம் சென்ற வீரவாகு, சின்னாச்சிப்பிள்ளையின் அன்புப் புத்திரனும், காலம் சென்ற பொன்னம்பலம், அன்னம்மாவின் ஆசைமருமகனும், கனகேஸ்வரியின் அருமைக் கணவரும், கஜமுகன் (லண்டன்), ஜெயமுகன் (சுவிஸ்), ஐங்கரன் (அமரர்), அம்பிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஸ்ரீராணியின் அருமை மாமனாரும்; அமரர்களான தாமோதரம்பிள்ளை, திலகவதியார், மீனாட்சிப்பிள்ளை, பொன்னம்பலம் மற்றும் சிதம்பரேஸ்வரி, மகாலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08.03.99 சுன்னாகத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மகன் - ஜெயமுகன் (மோகன்) சுவிஸ்
தொடர்புகளுக்கு 081 - 4162457



# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**

Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc,
75010 Paris.

M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# யாழ். சென்ற செய்தியாளர்கள் முன் அழுது புலம்பிய பெண்கள்

07.03.1999

செம்மணி புதைகுழி விவகாரத்தில் செய்தியாளர் சந்திப்புக்காக கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ். அழைத்துவரப்பட்ட சுமார் 35 செய்தியாளர்கள், யாழ். நீதிமன்றத்துக்கு வந்திருந்தவேளை நீதிமன்ற வளவில் கூடியிருந்த பெண்கள் சிறீலங்கா இராணுவ கைதின்பின் காணாமல் போன தமது உறவுகளின் நிலை குறித்து அழுது புலம்பினர். செய்தியாளர்கள் இவர்களை நோக்கி சென்று விசாரித்தவேளை பெண்கள் தமது உறவுகளுக்கு நேர்ந்த கதி பற்றி அழுது புலம்பினர். அதிலொரு பெண், தனது மகனை வயிற்றில் இருக்கும்போதே தனது கணவர் காணாமல் போய்விட்டதாகவும் அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி இது வரை எதுவும் தெரியவில்லை எனவும் மகனும் எனது அப்பா எங்கே என்று அடிக்கடி கேட்பதை தன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை எனவும் மகனுக்காகவே தான் உயிர் வாழ்கிறேன் எனவும் அழுதழுது நிருபர்களிடம் கூறினார்.



இன்னொரு பெண், யாழ். நகருக்கு பொருட்கள் வாங்க வெளிச் சென்ற தனது மகன் இன்னமும் வீடு திரும்பவில்லை என கூறி அழுது புலம்பினார். அழுது புலம்பிய பெண்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறமுடியாது செய்தியாளர்கள் உணர்வுமயமாக காணப்பட்டனர்.

# திருமலையில் சிங்களவீர விதுர்கன ஹர்த்தால்

07.03.1999

திருமலை நகரில் சிங்கள இனவாத அமைப்பான வீரவிதுர்கனவின் ஏற்பாட்டின்பேரில் சிங்கள வர்த்தகர்கள் ஹர்த்தால் ஒன்றினை நடத்தினர். இதனால் திருமலை நகரில் வசிக்கும் தமிழர்கள் மத்தியில் பெரும் பதட்டம் நிலவியது.

திருமலை கடற் பிரதேசத்தில் சிங்கள மீனவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனக்கோரியே இந் ஹர்த்தால் நடத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 50 சிங்கள மீனவர்கள் காணாமல் போயுள்ளதுடன், 20 மீன்பிடி படகுகளும் காணாமல் போயுள்ளதாகவும், சிங்கள மீனவர்கள் மீதான தாக்குதலை விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று சிங்களக் கடற்படைத்தரப்பு தெரிவித்தாலும் சிங்கள மீனவ தரப்பில் ஒருசாரார் இதனை மறுத்ததுடன் கடற்படையினர் தாக்குதலுக்கே சிங்கள மீனவர்கள் ஆளாகியிருப்பதாக குற்றம்சாட்டினர்.

இது தொடர்பாக சிங்கள மீனவர்களின் தூதுக்குழு ஒன்று வடக்கு கிழக்கு ஆளுநரை சந்தித்து முறையிடச் சென்றபோது அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இதனை யடுத்தே சிங்கள விதுர்கன அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் சிங்கள வியாபாரிகளை தூண்டிவிட்டு ஹர்த்தால் ஒன்றிற்கு ஒழுங்கு செய்தனர். இக் ஹர்த்தாலை அடுத்து நகரின் ஏகாம்பரவீதி, மத்தியவீதி, பிரதானவீதி ஆகியவற்றில் உள்ள கடைகள் இழுத்து மூடப்பட்டதுடன் வீதித்தடைகளும் போடப்பட்டன.

தமிழ்ப் பெற்றோர் பாடசாலைகளுக்கு சென்று தமது பிள்ளைகளை உடனடியாக வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். நகரில் பாதைகள் நடமாட்டமும் குறைந்தது. இராணுவ - பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அவ்விடங்களில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவிட்டனர்.

# கம்பளையில் ஐ.தே.க போராட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியினர் கம்பளையில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தை குழப்ப முயன்றபோது பொது ஜன ஐக்கிய முன்னணிக் குண்டர்கள் ஐ.தே.க. ஆதரவாளர்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். கம்பளை பேருந்து நிலையத்திற்கு அருகில் பொது ஜன ஐக்கிய முன்னணி பிரதேச அமைப்பாளர் தலைமையில் வந்த இக் குண்டர்கள் டயர்களை எரித்ததுடன் ஐ.தே.க வின் போராட்டத்திற்கு எதிராக வன்முறையைப் பிரயோகித்தனர்.

இவ்வேளை அவ்விடத்திற்கு வந்த ஐ.தே.க ஆதரவாளர் குழு அக் குண்டர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை அவ்விடத்திலிருந்து துரத்தியடித்தது. இச் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு வந்த ரணிலுக்கு அதிரடிப் படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

# அந்நியருக்கு இடமளித்ததால் சிங்களவர்கள் அநாதைகளாகிவிட்டார்கள்

## - பௌத்த மகா சம்மேளனத் தலைவர்

இந்த நாட்டில் பௌத்த கலாச்சாரமும் வரலாறும் நாசப்படுத்தப்பட்டு வருகின்றன. உலகில் எந்த ஒரு நாட்டிலும் இவ்வாறு இல்லை. அந்நிய இனங்களுக்கு இடமளித்ததற்காக எமது நிலங்கள் சூறையாடப்படுகின்றன என இவ்வாறு அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத் தலைவர் [illegible] அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்த நாடு ஒரு பௌத்த நாடாக இருந்தும் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோர்கள் சிங்களவர்களாக இருந்தும் எமது நிலம் அந்நியர்களால் சூறையாடப்படுகிறது. இவ்விடயத்தில் யாரும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. தற்பொழுது இந்த நாட்டின் சிங்கள மக்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். இதற்கு முக்கிய காரணம் பௌத்த பிக்குகள் மத்தியில் ஏற்பட்ட பிரிவாகும். எம்மிடையே ஒற்றுமை இல்லையெனில் நாம் எதனையும் சாதிக்கமுடியாது. நாம் அனைவரும் இதயபூர்வமாக எமது வரலாற்றைச் சிதைக்க அனுமதிக்க முடியாது எனவும் அவர் மிக ஆவேசமாகக் கூறினார். இக் கூட்டத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களைப் பற்றிய கண்டனச் சொற்கள் சரமாரியாக பிரயோகிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.


## அறிவித்தல்

Choisy le Roi-RER இற்கு அருகில் கந்தசாமி செந்தில்நாதன் என்பவரது யாழ். மாவட்டத்திற்குரிய 'விசேட அடையாள அட்டை' கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.


யாழிலிருந்து வெளிவரும் உதயன் நாளிதழில் செம்மணி 'மண்ணெடுப்பு' தொடர்பாக கடந்த 6-ம் திகதி வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகள்...

# செம்மணியில் மண் பார்த்த குருடர்கள்

நேற்று புதைகுழி இருப்பதாகக் கூறப்பட்ட செம்மணிப் பகுதிக்கு நீதிவான் சகிதம் நிபுணர், குழுவும் விசாரணைக்குழுவும் சென்றன. அங்கே இடத்தைப் பார்வையிட்ட குழுவினர் பல இடங்களிலும் மண்ணின் மாதிரியை சோதனைக்கு எடுத்துக் கொண்டனர். அதில் தான் வேடிக்கை? செம்மணியில் புதைகுழி இருப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் குற்றவாளி சோமரத்ன ராஜபக்ஷ தகவல் வெளியிட்ட பின்னர் அந்தப் பிரதேசத்தைக் குழப்பும் விதத்தில் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதா என்பதை ஆராய்வதற்காகவே இந்த நீதிவான் தலைமையிலான விசாரணை நிபுணர் குழு நேற்று செம்மணிக்கு புறப்படுவதற்காக நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. நிபுணர்கள் எழுந்தமானமாக பல்வேறு இடங்களிலும் மேல் மண்ணை அகழ்ந்து அங்கு குழப்பங்கள் ஏதும் இடம் பெற்றிருக்கின்றனவா என்பதை அந்தமண்ணை சோதிப்பதன் மூலம் முடிவுக்கு வருவார்கள் எனக் கூறப்பட்டது.

செம்மணி பல சதுர கிலோ மீற்றர் பிரதேசத்துக்கு பரந்து விரிந்து கிடக்கும் நிலப்பரப்பு. அப்பிரதேசத்தில் கண்டி வீதிக்கும் செம்மணி-நல்லூரை இணைக்கும் செம்மணி வீதிக்கும் இடையில் உள்ள ஒரு சிறிய பிரதேசத்திலேயே எழுந்தமானமாக மண் மாதிரிகள் எடுக்கப்பட்டன. செம்மணி-நல்லூர் வீதிக்கு கிழக்கே உள்ள செம்மணி உப்பளப் பிரதேசம் நீர் தேங்கி சேறாகக் கிடந்ததுடன் அந்தப் பகுதியில் மண் மாதிரிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. அதாவது கண்டி வீதியில் இருந்த பக்கத்தில் பார்வைக்கு எட்டிய தூரத்தில் உள்ள நிலப்பரப்பில் இருந்தே மண் மாதிரிகள் எடுக்கப்பட்டன.

செம்மணி புதைகுழியில் பல நூற்றுக்கணக்கானோர் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது. கண்டி வீதியில் இருந்து பார்வைக்கு எட்டிய தூரத்தில் இத்தனை எண்ணிக்கையானோரை மக்கள் புழக்கம் பெரிதும் உள்ள வீதிக்கு அருகில் அவர்களுக்குத் தெரியக் கூடிய தூரத்தில் புதைக்கும் அளவுக்கு அதனைச் செய்தவர்கள் முட்டாள்களாக இருந்திருக்க மாட்டார்கள். இந்த விடயம் அம்பலத்துக்கு வந்த பின்னர் அந்தப் புதைகுழி பிரதான கண்டி வீதிக்கு கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருந்திருந்தால் அதனைக் குழப்பி மனித எச்சங்களை அங்கிருந்து அகற்றி இருப்பார்கள். பிரதான வீதிக்குப் பக்கத்தில் உள்ள அரை கிலோ மீற்றர் பிரதேசத்தில் தமக்கு விரும்பியபடி எழுந்தமானமாக மண்ணை சோதனைக்கு எடுத்துச் சென்று அதனைப் பரிசோதிப்பதன் மூலம் புதைகுழி இருந்த பிரதேசத்தில் அது பற்றிக் குற்றச்சாட்டு வெளியாகிய பின்னர் மண் வேண்டுமென்று குழப்பப்படவில்லை அல்லது குழப்பப்பட்டது என்ற முடிவுக்கு எப்படி வர முடியும்? அதனால் தான் நேற்றைய நடவடிக்கையை 'குருடன் யானை பார்த்த கதை' என்று குறிப்பிடுவது பொருத்தமானது. இதனை உதயன் பிரதிநிதி செம்மணியில் வைத்து நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். மண் மாதிரி சேகரிப்பு வெறும் எழுந்தமானமாக ஊகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை நீதிவான் அப்போது ஒப்புக் கொண்டார்.

இந்த விவகாரத்தில் மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படாத செம்மணி- நல்லூர் வீதியின் கிழக்குப் புறத்திலேயே பெரும்பாலும் புதைகுழி இருக்கும் என்று பொதுவாக நம்பப்படுகிறது. ஆனால் இதுவரை நடந்த விசாரணைகளில் சோமரத்ன ராஜபக்ஷ எந்தக் கட்டத்திலும் புதைகுழி எங்கே அமைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிடவில்லை. நீதிவானுக்கு முன்னால் புதைகுழி தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கும் போது இடத்தைக் காட்டுவதாகத் தெரிவித்துள்ளார். ஆகவே ராஜபக்ஷவை கூட்டி வராமல் செம்மணிக்கு வெறுமனே தொடர்பு சாதனங்களைச் சேர்ந்த 55 பேரை ஒரே கூட்டமாக அழைத்து வந்து மண்மாதிரி எடுப்பது போன்ற பெரிய 'பம்மாத்து' நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதனை தென்னிலங்கை மாகாண சபைத் தேர்தலை ஒட்டி அரசு எடுக்கும் ஒரு 'ஸ்டண்ட்'டாகவே கருத வேண்டியுள்ளது.

அத்தோடு சர்வதேச சமூகத்திற்கு முன்னால் இது ஒரு கண்துடைப்பு ஏற்பாடாகவும் அமைந்துள்ளது. நீதி இவ்வாறு நாட்டப்படுவது மாத்திரமல்ல நிலை நாட்டப்படுவது போலவும் காட்டப்படவும் வேண்டும்? இது நீதித்துறையின் அடிப்படை மகாவாக்கியமாகும். செம்மணி நிகழ்வும் அதன் பெறுபேறுகளும் அந்த மகாவாக்கியம் காட்டும் நம்பிக்கையை யாழ். மக்களின் மனதில் ஏற்படுத்துமா என்பது சந்தேகமே.





## எகிப்து

# லிபியத் தலைவர் எகிப்து விஜயம் லொக்கர்பி விவகாரம் பற்றி பிரஸ்தாபம்

(05.03.99)

லிபியத் தலைவர் முகமர் கடாபி அவர்கள் அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு எகிப்துக்கு வந்து சேர்ந்தார். 1988-ம் ஆண்டு ஸ்கொட்லாந்தின் லொக்கர்பி நகருக்கு மேலாக பனாம் விமான நிறுவனத்தின் விமானம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவத்தின் சூத்திரதாரிகள் என குற்றம் சாட்டப்பட்டுள்ள இரண்டு லிபிய உளவுத்துறையினரை மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைப்பது பற்றிய ஆலோசனைகளை எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக்குடன் பகிர்ந்துகொள்வதற்காகவே லிபியத் தலைவர் எகிப்து வந்து சேர்ந்துள்ளார். லிபியத் தலைவருடன் பல அரச அமைச்சர்கள் மற்றும் லிபிய வர்த்தக பிரதானிகளும் எகிப்துக்கு வந்துசேர்ந்துள்ளனர். லிபியாவில் விமானங்கள் இறங்கவோ அல்லது புறப்படவோ ஐ.நா.வினால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் நீண்ட வாகனத் தொடரின் மூலம் தரைவழியாக கடாபிக் குழுவினர் எகிப்திய எல்லையைக் கடந்தனர். லொக்கர்பியின் சந்தேக நபர்களை விசாரணைகளுக்காகக் கொண்டுவருவதில் மேற்கு நாடுகளுக்கும் லிபியாவுக்கும் இடையே பல வருடங்களாக இழுபறிகள் இருந்து வந்தன. இந் நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் இருவரையும் நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதி மன்றத்தில் விசாரணைக்காக ஒப்படைக்க லிபியா இணங்கியது. ஸ்கொட்லாந்தின் நீதி அரசர்கள் முன்னிலையில் இருவரும் விசாரணைக்காக நிறுத்தப்பட லிபியா ஒத்துக்கொண்டாலும் இருவரும் நெதர்லாந்தில் தங்கியிருக்கும்வேளை பிரித்தானிய, அமெரிக்க அதிகாரிகளினால் விசாரணை செய்யப்படக் கூடாது என்றும் சில வேளை இருவரும் அமெரிக்காவுக்கோ, பிரித்தானியாவுக்கோ கடத்தப்படலாம் என்றும் கூறிய லிபியா இருவரையும் ஒப்படைக்க மறுத்தது. அதற்கான உத்தரவாதம் தனக்குக் கிடைத்தால் மாத்திரமே இருவரையும் தமது நாடு ஒப்படைக்கும் என லிபியா அறிவித்தது. இந்நிலையில் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் தென்னாபிரிக்க ஜனாதிபதியும் சவூதி மன்னரும் தலையிடுவதாக கடந்த செவ்வாயன்று தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இவ் விருவரையும் ஒப்படைக்கும் விவகாரம் சம்பந்தமான மேலதிக பேச்சுக்களை லிபிய அதிபர் மேற்கொள்வார்.




லொக்கர்பி விமானத் தகர்ப்பு சந்தேக நபர்கள்

## துருக்கி

# குண்டுவெடிப்புக்களால் ஐவர் பலி; பலர் காயம்

(05.03.99)

துருக்கியின் இரண்டு பகுதிகளில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களால் ஐந்து பேர் இறந்து பலர் படுகாயமடைந்தனர். இதில் மாதிரி ஆறுதரும் காயமடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய துருக்கியின் காண்கிரியில் கடந்த வெள்ளியன்று அப்பகுதியின் ஆளுனரும் அவரது மெய்ப்பாதுகாவலரும் பயணம் செய்த வாகனத்தின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த மற்றுமொரு வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் ஆளுநர் படுகாயமடைந்தார். அவருடன் பயணம் செய்த பாதுகாவலரும், வாகன ஓட்டுநரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு யார் காரணம் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

கடந்த வியாழனன்று தென் கிழக்கு நகரான பாத்மானில் குர்திஷ் தற்கொலை போராளி எனக் கருதப்படும் பெண்ணொருவர் குண்டுத்தாக்குதல் ஒன்றின்மூலம் தன்னை அழித்துக்கொண்டார். இச் சம்பவத்தில் நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

குர்திஷ் தலைவர் அப்துல்லா ஒசெலான் துருக்கியினால் கைது செய்யப்பட்டதன் பின் இவ்வகையிலான சம்பவங்கள் துருக்கியில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத அரசு என கிரேக்கத்தை துருக்கி வர்ணிப்பு

(05.03.99)

துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் இஸ்மாயில் செம், கிரேக்கத்தை பயங்கரவாத அரசு என வன்மையாகக் கண்டித்தார். கடந்த வெள்ளியன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்த துருக்கி வெளிவிவகார அமைச்சர் இனிமேல் தனது அண்டை நாடான கிரேக்கத்துடன் எவ்விமேல் எந்தவொரு அத்தியாவசிய விவகாரங்கள் தொடர்பாகவும் பேச்சுக்களைத் துருக்கி பேசாது என்றும் துருக்கிய குர்திஷ் அமைப்பினருக்கு கிரேக்கம் உதவி வருவதே இதற்குக் காரணம் என்றும் கூறினார்.

நீண்ட கால எதிரிகளான இரு நாடுகளுக்கும் இடையேயான பிணக்கு, அண்மையில் நைரோபியில் வைத்து குர்திஷ் தலைவர் ஒசெலான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேலும் இறுகியது. துருக்கி வெளிவிவகார அமைச்சர் தமது உரையில் கிரேக்கத்தின் அரசியல்வாதிகள் தங்களது பொறுப்பற்ற தன்மைகளாலும் முட்டாள் தனமான நடவடிக்கைகளினாலும் குரூர மனப்பான்மையாலும் அந்த நாட்டை ஒரு பயங்கரவாத அரசாக மாற்றியுள்ளார்கள். அவர்களுடன் நாம் சைப்பிரஸ் பற்றியோ, ஏஜியான் பற்றியோ எவ்விமேல் பேச்சுக்களை நடாத்தமாட்டோம் என அறிவித்தார். இதே வேளை துருக்கி ஒசெலான் விவகாரத்தினை இரு நாடுகளுக்குமிடையேயான சைப்பிரஸ் பிரச்சினையுடனும், ஏஜியான் கடல் விவகாரத்துடனும் இணைக்க முயற்சித்து இலாபமடைய முயற்சிக்கின்றது என்றும் தமது நாடு குர்திஷ் மக்களுக்கு வழங்கும் மனிதாபிமான உதவிகளை இத்துடன் இணைக்க துருக்கி முனையக்கூடாது என்றும் கிரேக்கப் பிரதமர் கூறினார்.

## தென்னாபிரிக்கா

# புதிய தேர்தல் திகதியை மண்டேலா அறிவித்தார்

05.03.99

தென்னாபிரிக்காவில் எதிர் வரும் ஜூன் மாதம் 2-ம் திகதி பாராளுமன்றத்துக்கான தேர்தல்கள் இடம்பெறும் என ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கடந்த புதனன்று அறிவித்துள்ளார்.




1994-ம் ஆண்டு நடந்த தேர்தலின் மூலம் தென்னாபிரிக்காவில் நிறவெறிபாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின் ஐந்து வருடங்களின்பின் புதிய தேர்தல் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இத் தேர்தலில் எவ்வா அரசியல் கட்சிகளுக்கும் பிரச்சாரம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தலில் 63 விகித வாக்குகளை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பெற்று பெரு வெற்றியைப் பெற்றிருந்தது.

ஆனால் தற்போதைய கணிப்புக்கள் 53-55 விகித வாக்குக்களையே ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பெற்றுக்கொள்ளும் எனக் கூறுகிறது. இந்த வாக்கு விகிதம் நாட்டின் அரசியல் சட்டத்தில் திருத்தங்களைக்கொண்டுவரப் போதுமானதாக இருக்காது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தென்னாபிரிக்காவில் நிலப் பங்கீடு மத்திய அரசின் அதிகாரம் போன்றவற்றின் மாற்றங்களைக்கொண்டு வரமுனையும் தற்போதைய அரசிற்கு இது ஏமாற்றமாக அமையும் என மேலும் அவர்கள் கூறியுள்ளனர்.

சிவாசினி வாகன சேவை
Chivashini Transport



வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 / 0614424117 / 01 42 05 44 04
டின்னர் றெஸ்ரோறன்ட்

## ஆப்கானிஸ்தான்

# ஆப்கான் ஆட்சியாளர்கள் முஜாஹிதீன்கள் மீண்டும் பேச்சுவார்த்தையில்!

(05.03.99)

ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் ஆட்சியாளர்களும் அவர்களுக்கெதிராக போரிட்டு வரும் ஆப்கானிய முன்னாள் ஆட்சியாளர்களும் மீண்டுமொரு கட்டப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட இணங்கியுள்ளனர். ஐ.நா.வின் ஆப்கானிஸ்தானுக்கான விசேட தூதுவர் லக்தர் பிராஹிமி கடந்த வியாழனன்று இப் பேச்சுவார்த்தை அறிவித்தலை பத்திரிகையாளர்கள் முன்னிலையில் வெளியிட்டார்.

ஆப்கானிஸ்தானில் போரிடும் இரு தரப்பினரும் எதிர் வரும் 10-ம் திகதி துர்க்மெனிஸ்தானின் தலைநகரம் அஷ்கபாத்தில் சந்தித்துக்கொள்வார்கள் என்றும் இப் பேச்சுவார்த்தைகளின்போது ஐ.நா.வின் உயர்மட்ட அதிகாரியொருவரும் கலந்துகொள்வார் என்றும் திரு. பிராஹிமி தெரிவித்தார். இங்கு நடைபெறும் பேச்சுக்களில் துர்க்மெனிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் பொரிஸ் சிக்முராடோவ் மத்தியஸ்தராகக் கலந்துகொள்வார்.

ஆப்கானிஸ்தானில் நடக்கும் போரினை முடிவிற்குக் கொண்டுவருவதில் ஐ.நா. சபை கடந்த பல வருடங்களாக முயன்று வருகின்றபோதிலும் இடம்பெறும் பேச்சுக்கள் யாவும் தீர்வுகள் இன்றியே முடிவடைந்து வந்துள்ளன. இந்நிலையில் இனி நடக்கப்போகும் பேச்சுவார்த்தைகளிலும் இணக்கங்கள் ஏற்படாவிட்டால் அங்கு மற்றுமொரு இரத்தக்களரி ஏற்பட வாய்ப்புண்டென்று ஐ.நா.வின் விசேட தூதுவர் எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் போரிடும் இரு தரப்பினரும் வெளிநாடுகளில் இருந்து ஆயுத உதவிகளைப் பெற்றுவருகின்றனர். ஆப்கானிஸ்தானின் மலைப்பகுதிகளில் துருப்புக்கள் நகர முடியாததால் அப்போது யுத்தம் தேக்க நிலையை அடைந்து காணப்படுகிறது. ஆனால் இளவேனிற்காலம் ஆரம்பமாவதால் இருதரப்பினரும் பெரும் யுத்தம் ஒன்றிற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வேளை பேச்சுவார்த்தை காண்பது மிக அவசியமானது என ஆப்கான் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்

# தாயகபரணி

நோர்வே கலைபண்பாட்டுக்கழக இசைக்குழுவின் பின்னணி இசையில் நோர்வே ரீதியிலான சிறார்களுக்கான பாடல்கள் நிகழ்ச்சி. பல்வேறுபட்ட இளைஞர் சமூக இருக்கும் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக முதல் தடவையாக நோர்வே மண்ணில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சி.

- ★ இப்போட்டி 15 வயதிற்கு கீழ்ப்பட்டோர், மேற்பட்டோர் என இரு பிரிவுகளாக இடம்பெறும்.
- ★ ஒருவர் 3 பாடல்களைத் தெரிவுசெய்து அவற்றுள் பொருத்தமான ஒரு பாடலைப்பாடலாம்.
- ★ இதுவரை காலமும் தாயகத்திலோ அன்றி புலம்பெயர்ந்த நாடுகளிலோ எம்மவர்களினால் வெளியிடப்பட்ட விடுதலைப் பாடல்களை மாத்திரமே தெரிவுசெய்தல் வேண்டும்.
- ★ தகுதிகாண் தேர்வின் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கான தேர்வு இடம்பெறும்.
- ★ இறுதிப்போட்டி 15.05.99 அன்று Oslo Folketshus ல் நடைபெறவிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 'புலத்தில் பூபாளம்' சிறப்புக் கலைமாலையில் இடம்பெறும்.
- ★ இறுதித் தேர்வில் துறைசார் நடுவர்களுடன், பார்வையாளர்களும் வெற்றியாளர்களைத் தெரிவுசெய்வதில் பங்குபெறுவார்கள்.
- ★ விண்ணப்ப முடிவுத்திகதி பங்குனி 22 (22.03.99)
- ★ விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முகவரி: TRO
  Pb.4742 Sofienberg, 0506 Oslo
- ★ விண்ணப்பக்கட்டணம் - 15 வயதிற்குட்பட்டோர் 50
  15 வயதிற்குமேற்பட்டோர் 100
- ★ தகுதிகாண் தேர்வுக்கான திகதி பின்பு அறியத்தரப்படும். விண்ணப்பக்கட்டணத்தை தகுதிகாண் தேர்வின் போது நேரடியாக செலுத்தலாம்.
- ★ மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 91350469 / 22164379

## தாயகபரணி

ஈழவிடுதலைப் பாடல் போட்டி நிகழ்ச்சி

விண்ணப்பப்படிவம்

பெயர்:..........................................

வயது:..........................................

தொ.இல:..........................................

முகவரி:..........................................

..........................................

பாடல் தெரிவு 1:..........................................

பாடல் தெரிவு 2:..........................................

பாடல் தெரிவு 3:..........................................

# வெளிநாட்டவர் சமூக சுகாதார காப்புறுதி?

**உங்களது சமூக சுகாதார காப்புறுதி மிக குறைந்த செலவில் சிறந்த சேவை!**

உங்களுக்கோ, உங்கள் கணவனுக்கோ, மனைவிக்கோ, குழந்தைகளுக்கோ அல்லது சகநண்பர்களுக்கோ, பங்காளிகளுக்கோ....

உங்கள் வதிவிடப் பத்திரத்தை விண்ணப்பிப்பதற்கு பொலிஸ் தலைமையகக் காரியாலயத்தால் (Préfecture de Police) அங்கீகரிக்கப்பட்டது.

***COSMOPOLITE SERVICES***

*115, avenue de la Bourdonnais,*
*75007 Paris.*
*M°: Ecole Militaire*
*Tel: 01 45 51 00 22 / Fax: 01 40 62 30 77*

# உங்கள் ஸ்தாபனத்திற்கு கணக்காளர் தேவையா ?

**தொடர்புகளுக்கு நாடுங்கள்:**

**ALGER**
**5 Rue Fouguet, 93700 Drancy.**
**Tel: 01 48 32 04 15**
**Fax: 01 48 30 05 43**

# தமிழர் கைத்தொலைபேசி நிலையம்

SFR **ALLO COM** itineris



*27, rue du clos,*
*75020 Paris*
*Tel: 0143730011 / 0616024856*
*Métro-Maraichairs ou port de monteruil*



தொலைபேசிகளை குறைந்த விலையில் கொடுக்கின்றோம்

விபரங்களுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

Cheque இல்லாமலும் தொலைபேசி இணைப்புக்கொடுப்போம்

*Chargeur voiture....99 F*
*Chargeur Maison...99 F*
*Housse....................49F*
*Antenne..................49F*
*Facade....................129F*
*Baterrie..................149F*

- ★ எங்களிடம் ஒரு தொலைபேசி அட்டை வாங்குவோருக்கு ஒரு தமிழ்ப்படத்தின் வீடியோ பிரதிக்கு ஒரு நாள் வாடகை இலவசம்.
- ★ அனைத்துத் தமிழ்ப் படங்களுக்கும் ஒரு நாள் வாடகை 7F மட்டுமே.
- ★ நீங்கள் விரும்பும் பாடல்களை CD யில்பதிவு செய்து மிக மலிவாகத் தருகிறோம்.
- ★ மேலதிக விபரங்களுக்கு எங்களிடம் தொடர்புகொள்ளுங்கள்.

Limoges வாழ் தமிழ் மக்களின் நலன் கருதி விரைவில் அனைத்து மளிகைப்பொருட்களும், வீடியோ பத்திரிகைகள் அனைத்தும் ஒரேயிடத்தில்பெற **ALLO BAZAR**



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# வதைச் சட்டத்தில் என்ன திருத்தம்

சில தசாப்தங்களுக்கு முன்னதாக பௌத்த பேரினவாதத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தமிழ் மக்கள் மீதான கொலையுகம் இன்றும் சிங்கள தேசத்தால் தொடரப்பட்டுக்கொண்டுள்ளது.

கொழுக்கட்டை, மோதகம் போல சிங்கள தேசத்தின் ஆட்சி வடிவங்கள் மாறினாலும் தமிழர் தாயகத்தின் மீதான போர்வெறி 'உள்ளுடன்' மாறாது அப்படியேதானுள்ளது. தமிழ் தேசியத்தின் குடிமக்களை தமது சொந்த தாயகத்திலிருந்து துரத்தியடிப்பதற்காக காலத்திற்குக் காலம் 'லிபரேஷன் ஒப்பரேஷன்' என்றும், 'ரண கோஷா' என்றும் குறியீட்டுப் பெயர்களை மாற்றி மாற்றி இராணுவ இயந்திரத்தை ஏவிவிட்டும் வருகிறது.

தமது சொந்த தாயகத்திலே வாழ்வுரிமை மறுக்கப்பட்ட தமிழ் மக்கள் உயிரைக் காத்துக்கொள்ளும் நோக்கில் புலம் பெயர்ந்து வருவது யதார்த்த விடயமாயினும் மேலெழுந்தவாரியாக இப்புலப் பெயர்வினை நோக்கும் சில சக்திகள் பொருளாதார அகதிகள் என்ற முத்திரையைக் குத்திவிடுவது வேதனைப்படவேண்டிய ஒரு நிகழ்வு.

மறுபுறத்தே புலம்பெயரும் தமிழ் மக்கள் மீது தனது வதைக்கரங்களை இறுக்கிய சிறீலங்கா அரசு தனது குடிவரவு-குடியகல்வு சட்டத்தில் திருத்தத்தினை மேற்கொண்டு அவர்களைச் சிறைகளில் தள்ளியுள்ளது. தமிழர்கள் சட்டவிரோதமாக வெளியேறி தனது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகிறார்கள் என்பதே சிறீலங்கா தரப்பின் வாதமாகும். 'செம்மணி புதைகுழி' போன்ற பல ஜனநாயக 'சிறப்புக்களைக்' கொண்ட சிறீலங்கா அரசு உயிருக்கு அஞ்சி ஓடும் தமிழ் மக்கள் மீது தனது விஷகாரத்தைக்காட்ட முனைந்துள்ளமை அப்பட்டமான அதன் பேரினவாதப் போக்கினை தவிர வேறொன்றுமில்லை. எவ்வகைதான் திருத்தச் சட்டங்கள் செய்தாலும் அது தமிழ் தேசியத்திற்கு எதிராகத்தான் அதனை மேற்கொள்ளும் என்பதற்கு இந்த விடயமும் ஒரு எடுத்துக்காட்டாகும். ஆனால் இதனை ஜனநாயக நாடுகள் என தம்மைக் கூறிக்கொள்ளும் நாடுகள் உணர்ந்து கொள்ளுமா?




நன்றி: THE SUNDAY LEADER

தான் ஜனநாயகத்தை காப்பாற்றுவதாகவும் அதற்காக தனக்கு 'நோபல்-பரிசு' வழங்கப்பட வேண்டும் எனவும் அண்மையில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்தார்.

அவரது செய்தியை கேலிசெய்து கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' பத்திரிகை பிரசுரித்த கார்ட்டூன் இது

# அனைத்துலக பரப்புரையில் தமிழ் - சிங்கள சமநிலை

*அமெரிக்கா கொசோவோவில் நிலவும் சூழ்நிலையை பயங்கரவாதம் எனக் கருதுகிறதா? 'எவ்வாறு உள்நாட்டு போர் வன்முறை நிகழாது இடம்பெறும்' 'கொன்றாஸ்' (Contras). அமைப்பை (அமெரிக்கா ஆதரவுபெற்ற நிக்கராகுவா கலகக்காரர்கள்) பயங்கரவாத அமைப்பாக கருதலாமா?'*

*- அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நீதிமன்றில் இடம்பெறும் புலிகள் மீதான தடைக்கு எதிரான வழக்கில் நீதிபதிகள் அமெரிக்க அரசிடம் எழுப்பிய கேள்விகள் (Tamil net)-08.03.1998*

அமெரிக்க காங்கிரசின் மனித உரிமைகள் குழுவானது அண்மையில் கூடி சிறீலங்காவில் மனித உரிமைகள் மேம்பாடு பற்றி ஆராய்ந்தது. அமெரிக்க இராஜாங்க அமைச்சின் 1998ம் ஆண்டிற்கான உலகளாவிய மனித உரிமைகள் பற்றிய அறிக்கையில் தீவிரமாக விமர்சிக்கப்பட்ட விடயங்களில் சிறீலங்காவும் ஒன்றாகும். இதன் தொடர்ச்சி போன்றே இக்குழுவின் கலந்துரையாடல் இடம்பெற்றது. இங்கு சிறீலங்காவின் நலன்களை (சிங்களவர்களின் நலன்களை) பேணுவதற்காக உருவாக்கப்பட்ட அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் சிலரை ஆக்கிய குழுவைச் சேர்ந்த 3 காங்கிரஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்டு புலி எதிர்ப்பு பரப்புரையை மேற்கொண்டனர். ஒரு உறுப்பினர் புலிகளை 'இந்து புலிகள் தீவின் தெற்கு பகுதிகளில் உள்ள இலங்கை வளங்களை கைப்பற்றுவதற்கு முனைகிறார்கள்' எனக் கூறியமை அமெரிக்க பாராளுமன்ற (காங்கிரஸ்) உறுப்பினர் ஒருவரின் அறியாமையைக் காட்டியது.

பார்வை

எனினும் அமெரிக்க அரசின் பிரதிநிதி புலிகள் மதவாதிகள் என்பதை நிராகரித்து அவர்கள் இனவிடுதலைக்காகவே போராடுகிறார்கள் என்பதை தெளிவுபடுத்தியதாக இக்கலந்துரையாடல் பற்றிய தகவலை வெளியிட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் கூறுகின்றன.

இக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஐ.நா. அகதிகள் ஆணைக்குழு வன்னிக்கு தேவையான உணவில் 40% த்தையே சிங்கள அரசு உட்செல்ல அனுமதிக்கின்றது என்பதையும் மருத்துவ தடையையும் சுட்டிக்காட்டியுள்ளார். மற்றுமொரு சர்வதேச நிறுவனமாகிய உலக உணவுத் திட்டம் (WFO) வன்னி நிலவரம் திருப்திகரமாக உள்ளது என தெரிவித்திருந்தமை சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வாறு உலக நிறுவனமொன்றை பகிரங்கமாக உண்மைக்கு மாறாக பேசவைக்கின்றனர் என்பதை வெளிக்காட்டுகின்றது.

இச் சந்திப்புக்கள் சிங்களப் பரப்புரைகள் எவ்வாறு முக்கியம் பெறுகின்றன என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் பல மில்லியன் டொலர்களை செலவிடுவதன் மூலம் தகுந்த ஆதரவு குழுக்களை உருவாக்கமுடியும். இவ் ஆதரவுக் குழுக்கள் தாம் நியமிக்கப்பட்ட (?) தரப்பை ஆதரித்து பொய்யான -பிழையான பரப்புரைகளை நிகழ்த்துவர். இது சாதாரணமாக 'சிகரெட்' உற்பத்தி பாதுகாப்பதிலிருந்து சந்திரிகாவை நியாயப்படுத்தும் செயற்பாடுகள்வரை பொதுவான விதியாகும்.

அமெரிக்காவின் பார்வையும், கருத்துக்களும் சரிசமமாக தமிழ்-சிங்கள இனமுரண்பாடு தொடர்பான விடயத்தில் அதிகரித்துச் செல்லும் இந்நிலையில் அவ் அர்த்தத்தை தமிழர்களுக்கு எதிரான திசையில் செலுத்த சந்திரிகா அரசு கங்கணம் கட்டி நிற்கிறது.

சிங்கள அரசைப் பொறுத்தவரை அதனது பலவீனமான 'பிரதேசங்கள்' மனித உரிமைகள், அகதிகள், இனபாதுபாடு என்பன சார்ந்த விடயமாகும். தமிழர்களை பொறுத்தவரை உலகெங்கும் உள்ள நியாயபூர்வமான அமைப்புக்களும், சக்திகளும் நசுக்கப்படும் மக்களின் கருத்துக்களை பரப்புரை செய்வதால் நீண்டகால நோக்கில் சாதகமான தளத்தைக் கொண்டுள்ளனர்.

சிங்கள அரசு இப் பலவீனங்களை கையாள்வதற்காக பலமானதென தான் கருதும் விடயங்களை பிரயோகிக்கின்றது. சிங்கள பேரினவாதம் தனக்குள் நடக்கும் தேர்தலை ஜனநாயகம் என பரப்புரை செய்கிறது. சிறீலங்காவை ஜனநாயக நாடாக வலியுறுத்தும் சிங்கள இனவாதத்தின் சர்வதேச பரப்புரையாளர்கள் புலிகளை ஜனநாயக விரோதிகளாக காட்டுவதற்கு ஏற்புடைய மறைமுக அழுத்தத்தைக் கொடுக்கின்றனர். அண்மையில் இடம்பெற்ற 'வயம்பா' மாகாண சபைத் தேர்தலில் சிங்கள ஜனநாயகம் ஆடிய வெறியாட்டத்தை இப்பரப்புரையாளர்கள் நீண்டகால ஓட்டத்தில் மறைந்துவிடலாம் எனக் கருதுகின்றனர்.

வணிக நலன்களை இராஜதந்திரத்திற்கான உத்தியாக கதிர்காமர் தீவிரமாக பயன்படுத்தி வருகின்றார். இது அமெரிக்காவுக்கு குறிப்பாக ஏற்புடையது. உலகம் பூராகவும் பரவிவாழும் சிங்கள இனவெறி தரப்பினரை புகலிட தமிழர்களுக்கு எதிரான 'தரைப்படையாக' சிங்கள அரசு பயன்படுத்துகின்றது.

மேலும் மேற்கத்தைய அமைப்பில் நடைமுறையில் உள்ள ஆதரவுக் குழுக்களை பணத்தைச் செலவிட்டு அமைப்பதன் மூலம் தமிழர்களின் அரசியல் கோரிக்கையை மழுங்கப்படுத்தி இராணுவ பலத்தை பகிரங்கமாக நிராகரித்த இனப்படுகொலையை நியாயப்படுத்த சிங்களம் முயல்கிறது.

இந்தப் பின்னணியில் தமிழ்-சிங்கள இனமுரண்பாடு சர்வதேச அளவிலான இராஜதந்திர, பரப்புரைப் போரை தீவிரமாக நடாத்த ஆரம்பித்துள்ளது.

ஐக்கியநாடுகள் சபையின் ஒவ்வொரு உப அமைப்புக்களும் தற்போது இந்நோக்கினை வெளிப்படுத்தும் தளங்களாக உருவாகி வருகின்றன. நீண்டகாலமாக ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு தமிழர்களின் நியாயபூர்வமான கோட்பாடுகளை பிரகடனப்படுத்தும் தளமாக இயங்கி வருகையில் வன்னியில் இடம்பெறும் இடம்பெயர்ந்த மக்களின் தொடர் போராட்டம் ஐ.நா அகதிகள் ஆணைக்குழுவினை UNHCR ஏற்றுக்கொள்ளுமாறு நிர்ப்பந்தித்துள்ளது. ஆனால் WFO போன்ற உப அமைப்புக்கள் சிங்கள அரசின் செல்வாக்குக்கு உட்பட்டு பொய்யான கருத்துக்களை பரப்புரை செய்வதன் மூலம் தமிழர்களுக்கு எதிராக உணவுத்தடையை மறைப்பதற்கான உதவியை அரசுக்கு வழங்கிவருகின்றது.

சுமார் 15 நாடுகளும், அமைப்புகளும் சிங்கள அரசையும், புலிகளையும் பேசவைக்க தயாராக உள்ளதாக கூறியுள்ளமை தமிழர்களின் குரலை ஓங்கி ஒலிக்க வைத்துள்ளது.

தொடர்ச்சியான, தீர்க்கமான போராட்டம் மூலம் இச் 'சமநிலையை' தமிழர்கள் எட்டி உள்ளனர். இச் சமநிலை ஸ்திரப்படவேண்டுமாயின் போர்க்கள நிலைமை தமிழர்களுக்கு சாதகமாக அமையவேண்டும் என்பதுடன் புகலிடத் தமிழர் ஒழுங்குபடுத்தப்பட்ட பரப்புரை வலையைப் பேணவேண்டும் என்பதும் அவசியமானதாகும்.

- ராஜா

# அனைத்துலக பெண்கள் தினமும் தமிழீழப் பெண்களும்

மார்ச் 8ம் திகதி இன்று அனைத்துலக பெண்கள் தினம். உலகப் பெண்ணினத்தின் உரிமைக்குரல், குரல்களைப் நெரிக்கும் கரங்களை பற்றி உலகெங்கும் ஒலித்த நாள். அன்று 1857ம் ஆண்டு மார்ச் 8ம் திகதி அமெரிக்காவில் புடவை ஆலைப்பெண் தொழிலாளர்கள் நாள் ஒன்றிற்கு 10 மணி நேர வேலையையும், ஆண்களுக்கு சமமான கூலியையும் தரும்படி கோரி வேலை நிறுத்தம் செய்து ஆர்ப்பாட்ட அணிவகுப்புக்களை நடத்திய நாள்.

பின் அந்த நாளையே அனைத்துலக பெண்கள் நாளாக உலகெங்கும் கொண்டாடப்பட வேண்டுமென 1910ம் ஆண்டு டென்மார்க்கில் உள்ள கோபன் ஹேகனில் கூடிய பெண்களின் 2வது உலக சோசலிச பெண்கள் மாநாட்டில் கிளாரா செட்கின் (Clara Zetkin) அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்பின், 1911ம் ஆண்டு மார்ச் 8ம் திகதி அனைத்துலக பெண்கள் நாளாக முதன் முதலில் ஜேர்மன், ஆஸ்திரியா, சுவீடன், டென்மார்க், ஆகிய நாடுகளில் கொண்டாடப்பட்டது. அதில் பெண்களுக்கு தேர்தலில் பங்கேற்கும் உரிமை வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

இந்த 1857க்கும் - 1910க்கும் இடைப்பட்ட 50 ஆண்டு காலப்பகுதி இலகுவாக கடந்திடவில்லை. பெரும்பாலான நாடுகளில் பரவலான பெண் உரிமைப் போராட்டங்கள், அமைப்புக்கள், வாக்குரிமை இயக்கங்கள் என்பன தொடங்கப்பட்டன. 1882 பிரான்சில் விக்டர் கியூகோவின் ஆதரவுடன் பெண்கள் உரிமைக்கான அமைப்பு தொடங்கப்பட்டது. 1866இல் பிரிட்டனிலும், 1869இல் அமெரிக்காவிலும் தேசிய பெண்கள் வாக்குரிமை இயக்கம் தொடங்கப்பட்டது. 1905 பிரிட்டனில் பெண்கள் விடுதலை இயக்கத்தினர் மான்செஸ்டரில் பெண் விடுதலை தொடர்பான சட்டம் கூறிய போது அன்னி கென்னி, கிறிஸ்தபல் பன்கர்ஸ்ட் (Pankhurst Dame Christabel) ஆகியோர் கைதாகினர்.

பிரிட்டனில் பெண்களுக்கான வாக்குரிமை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் Pankhurst குடும்பத்தினர் இன்றும் நினைவு கூரப்படுகின்றனர். இதில் தாயார் எமிலீன் (Emmeline Pankhurst) பல தடவை சிறை சென்றுள்ளார். அவரின் பிள்ளைகளான கிறிஸ்தபல் (1880-1958), சில்வியா (1882-1960), அடேல் (1885-1961) உண்ணாவிரதம், மறியல் போராட்டம் போன்றவற்றில் ஈடுபட்டு பல தடவை சிறை சென்றுள்ளார்கள்.

இதற்கு முன்னோ 1913ம் ஆண்டு பிரிட்டனில் பெண் விடுதலை இயக்க உறுப்பினரில் ஒருவரான எமிலி டாவின்சன் (Emily Davinson) பெண் உரிமைக்காக Derby எனும் இடத்தில் தானாகவே அரசின் குதிரைக்கடியில் விழுந்து தன்னைத் தானே மாய்த்துக்கொண்டு மேலும் இப்போராட்டத்தின் தேவையை பல்லோருக்கும் உணர்த்திவிட்டுள்ளார்.

இலங்கையில் பொதுசன வாக்கெடுப்பில் பெண்களுக்கான வாக்குரிமை பற்றிய போராட்டத்தில் அக்காலத்தில் இருந்த பெரும்பாலான அரசியல் பிரமுகர்களுக்கு உடன்பாடு இருக்கவில்லை. பிற்காலத்தில் பெண்களுக்காக இராமநாதன் கல்லூரியை அமைத்த சேர்.பொன். இராமநாதனுக்கே கூட இதில் உடன்பாடு இருக்கவில்லை.

**பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்ட**

| ஆண்டு | நாடுகள் |
|---|---|
| 1893 | நியூசிலாந்து |
| 1894 | அவுஸ்திரேலியா |
| 1895 | பின்லாந்து |
| 1896 | நோர்வே |
| 1897 | டென்மார்க் |
| 1898 | ரஸ்யா, நெதர்லாந்து, கனடா |
| 1899 | பிரிட்டன் |
| 1900 | ஜேர்மன், அவுஸ்ரியா, போலந்து, செக்கோசிலாவாக்கியா |
| 1901 | அமெரிக்கா |
| 1902 | இலங்கை டொனமூர் அரசியலமைப்பின்படி அனைத்து மக்களுக்குமான வாக்குரிமை வழங்கப்பட்டபோது ஆண்களுக்கு நிகராக 21 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பெண்களும் தேர்தலில் பங்குபெறும் உரிமையைப் பெற்றனர். |
| 1903 | ஸ்பெயின் |
| 1944 | பிரான்ஸ் |
| 1945 | இந்தியா |
| 1946 | சுவிட்சர்லாந்து |

இலங்கையில் பொதுசன வாக்கெடுப்பில் முதன் முதலில் தெரிவு செய்யப்பட்ட பெண் நேசம் சரவணமுத்து எனும் தமிழ்ப் பெண்மணி. கொழும்பு வடக்கிலிருந்து 'ஸ்டேட் கவுன்சில்'லுக்காக தெரிவு செய்யப்பட்டு 1932-1936 மட்டும் பதவியில் இருந்தவர். பெண்களைப் பொறுத்தவரை ஆசியாவிலேயே இது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக அன்று இருந்திருக்க வேண்டும்.

அதேபோல இன்று ஆசியாவில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக ஒன்றல்ல, பத்தல்ல, 3000க்கும் மேற்பட்ட பெண்கள் தமிழ் ஈழ தேசிய விடுதலைக்காக ஓர் படையின் கீழ் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே ஈகம் செய்ய அணி திரண்டு நிற்கிறார்கள். தமிழ் ஈழப் பெண்கள் பற்றிய ஆய்வில் இவர்களை விட்டுவிட முடியாதென்பது தமது முன் இவ்வாறான ஒரு மாபெரும் திருப்புமுனையை எம் பெண் சமுதாயத்தில் ஏற்படக் காரணமாக இருந்த எம் தலைவர் பிரபாகரனையும் எம் தமிழ்ப்பெண்கள் வரலாற்றில் மறக்க முடியாது. ஏனெ



எமிலின்

னில் அதன் தாக்கம் சாதாரண சமுதாயத்தில் பெண் விடுதலைக்கான ஒவ்வொரு அசைவிலும் தென்படுகின்றது.

தமிழ் ஈழத்தில்: ஆண்கள் அரச அடக்கு முறைக்கெதிராக போராடிக் கொண்டிருக்கும் அதே வேளையில் பெண்கள் அரச அடக்குமுறைக்கும், சமுதாய ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக போராட வேண்டிய நிலையில் உள்ளார்கள். காலம் காலமாக நிலவி வரும் சமுதாய ஒடுக்குமுறைகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராக போராடுவது என்பது கடினமானதொன்றாகும்.

தேசிய விடுதலையில் பெண் விடுதலை முக்கியமானது. பெண் விடுதலை என்றால் என்ன? அரச அடக்கு முறையில் இருந்தும் சமூக ஒடுக்குமுறையிலிருந்தும், பொருளாதாரச் சுரண்டல் முறையில் இருந்தும் பெண்ணினம் விடுதலை பெறுவதையே பெண்விடுதலை குறித்து நிற்கிறது. எனவே தேசம், சமூகம், பொருளாதாரம் என்ற மும்முனைகளிலும் விடுதலையை முன்னெடுக்கும் பெண் விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி குறிப்பிடத்தக்க வகையில் செயலாற்றி வருகின்றது.

தேசிய விடுதலையில் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் எழுச்சியும், வளர்ச்சியும் தமிழ் ஈழ பெண்களின் வரலாற்றில் ஒரு சாதனைக் கல்லாகவும் திருப்புமுனையாகவும் அமைகின்றது. இன்று ஆண் போராளிகளுக்கு சரிசமமாக எல்லாப் பிரிவுகளிலும் பெண் போராளிகள் பங்கேற்கின்றார்கள். பெரிய இராணுவ வாகனங்களைச் செலுத்துதல், இராணுவ உபகரணங்களைப் பாவித்தல் முதற்கொண்டு வேவுப் புலிகளாகவும், கரும்புலிகளாகவும், ஆழ்கடல் நீச்சல் வீராங்கனைகளாகவும் பல் சாத்துறைகளிலும் சரிசமமாகப் பங்கெடுக்கின்றார்கள். இந்நிலை அந்த சமுதாயப் பெண்களின் பார்வையில் குறுகிய காலத்திற்குள் குறிப்பிடத்தக்க மாற்றத்தை கொண்டு வருவதற்கு ஏதுவாக இருக்கின்றது. இது ஆண்களுக்குரிய வேலை, இது பெண்களுக்குரிய வேலை என்ற பாகுபாடு அருகி வருகின்றது.

1992ம் ஆண்டு 3ம் மாதம் முதலாம் திகதி நிறுவப்பட்ட சுதந்திரப் பறவைகள் அமைப்பு விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி இன்று 150 தொடக்கம் 200 வரையிலான குதிரை வலுவைக் கொண்ட இயந்திரங்கள் பூட்டப்பட்ட படகை மிக லாவகமாக செலுத்தி வருகின்றனர்கள். இதைவிட சமூக, அரசியல், பொருளாதார செயல்திட்டங்களை உருவாக்க என விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியால் 1990 ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி உருவாகியது. இது 1992ம் ஆண்டு விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பாக மாற்றம் பெற்றுச் செயல்படத்தொடங்கியது.

இவ் அமைப்பு பெண்களின் புனர்வாழ்வு, சமூக மேம்பாடு, மாணவர் அமைப்பு, செஞ்சோலை சிறுவர் அமைப்பு, சுதந்திரப் பறவைகள் ஏடு, பெண்கள் ஆய்வு நிறுவனம் என பல்வேறு துறைகளிலும் தமது கவனத்தை செலுத்தி பெண்ணின் விடுதலையை சமூக விழிப்புடன் முன்னெடுத்துச் செல்வதால் அதன் தாக்கம், சாதாரண பெண்கள் வாழ்க்கையிலும் மாற்றத்தைக் கொடுத்துள்ளது. பெண்கள் சுயதொழில் வாய்ப்பின் மூலம் தமது சொந்த உழைப்பில் தங்கியிருத்தல், விதவை மறுமணம், போசாக்கு பற்றிய அறிவு, பெண்கள் விவசாயம், மீன்பிடி, துலா ஏறுதல் போன்ற எல்லா வேலைகளிலும் ஈடுபடுதல் போன்றவற்றின் மூலம் இதை உணரக் கூடியதாக உள்ளது.

நீண்ட காலமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொடர்ச்சியாக நடந்து வந்த உரிமைப் போராட்டங்களின் பலாபலனாக பெண்ணினம் அடிப்படையான மனித உரிமைகளையும், அரசியல் சுதந்திரங்



பொதுசன வாக்கெடுப்பில் முதன் முதலில் தெரிவு செய்யப்பட்ட பெண் நேசம் சரவணமுத்து

களையும் வென்றெடுக்க முடிந்தது. எனினும் இந்நாடுகளில் பெண்களின் பிரச்சினை தீர்ந்த பாடில்லை. ஏதோ ஒரு வடிவில் அவை மீண்டும் வரத்தான் செய்கின்றன. சேர்ந்து வேலை செய்யும் தொழில் ஸ்தாபனங்களில் பாலியல் முறைகேடுகள், வேலைக்குப் போகும் கணவர் மனைவியர் இடையே வீட்டு வேலைப் பகிர்வுகளில் குழப்பம், பாரம்பரிய பெண்கள் வேலைக்கு ஆண்களும், பாரம்பரிய ஆண்கள் வேலைக்கு பெண்களும் முன்வரத் தயக்கம், கருத்தரித்தல், குழந்தைகள் பராமரிப்பு, பால், வேறு சாதி போன்ற பல்வேறு வடிவில் இன்னும் உரிமைப் போராட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

இது இப்படி இருக்க, இராணுவ கெடுபிடிகளுக்குள்ளும், அடக்குமுறைகளுக்குள்ளும் இருக்கும் எமது தமிழ் ஈழம் போன்ற நாடுகளில் வாழும் சாதாரண பெண்களின் நிலை, ஓங்கி குரல் எழுப்ப முடியாத நிலையில் இராணுவ அழுத்தங்களுக்குள் அமுங்கிப் போய் உள்ளது.

அண்மையில் தமிழ் ஈழத்தில் வடமராட்சிப் பகுதியில் இருந்து இரண்டே மாதங்களுக்கு முன் புகலிடம் வந்த இளம் பெண்மணியை எனக்கு சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்குள்ள பெண்களின் நிலையைப் பற்றி அவர் மனம் விட்டு உரையாற்றினார்.

'சாதாரண பெண்கள் மிகப் பயந்த நிலையிலேயே வாழ்கிறார்கள். அங்கு எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். இராணுவ முகாமைத் தாண்டி எங்கு ஒரு இடமும் போக முடியாது. ஆகவே யாரும் வயது வந்த அம்மா, அப்பாவுடன்தான் போவது. அண்ணா, தம்பியுடன் போக முடியாது. விசாரணை என்ற பெயரில் அவர்களை மறித்து விடுவார்கள். மொத்தத்தில் எங்கும் போகாமல் இருப்பதே உத்தமம். ஆனாலும் இரவு 6 மணிக்கு ஊரே அடங்கி விடும். காற்று சத்தமும், நாய்க் குரைத்தால் அது மட்டும் தான் சத்தமாக இருக்கும். இரவு இராணுவம் எங்கும் நடமாடும். இளம் பிள்ளைகள் இருக்கும் வீட்டுக்கு இராணுவம் போவார்கள், பின் அங்கு இருந்து எவ்வளவு குழறிச் சத்தம் கேட்டாலும் உதவிக்கு ஒருவரும் போக மாட்டார்கள். அருகில் சொந்த அண்ணன் வீடு இருந்தாலும் அவரும் போக முடியாது. போக எத்தனித்து வீட்டுக்கு வெளியே வந்தால் இராணுவத்தின் துப்பாக்கி வேட்டுக்கு பலியாக நேரிடும்.

இங்கு வெளிநாட்டில் கிருசாந்தியின் கொலையைப் பற்றி எல்லோரும் கதைக்கிறீர்கள். அங்கு இப்படி ஒவ்வொருநாளும் நடந்துகொண்டு தான் இருக்கிறது. ஆனால் எல்லாமே வெளிவருவது என்று இல்லை. கிருசாந்தியின் குடும்பம் கொஞ்சம் படித்த குடும்பமாக இருந்தமையாலும், சகோதரி கொழும்பில் இருந்ததாலும் வெளிவந்தது. அங்கு ஏழை குடும்பத்தில் அடுத்த நேர சாப்பாட்டை பற்றி மட்டுமே சிந்திக்க திராணியுள்ள குடும்பங்களில் இப்படி எத்தனையோ நடந்துள்ளன. கத்திக் குழறி, தலை தலையாக அடித்து அழுதுவிட்டு இருக்கிறார்கள். அவர்கள் பற்றி இங்கு ஒருவருக்கும் தெரிந்திருக்க நியாயம் இல்லை. பயந்து பயந்து ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைத்துத்தான் பெண்களின் வாழ்வு கழிகிறது. சொந்த மண்ணை விட்டு வெளிநாடு வந்தாலும் வந்தது போல இல்லை. எமது சொந்த மண் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. அது இப்போ எமது சொந்த மண் போல இல்லை' இதுதான் அந்த சகோதரி இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் எமது தமிழ் ஈழப்பெண்கள் பற்றிக் கூறியது.

இது போல அமெரிக்காவில் அமெரிக்காவின் முதல்பெண்மணி கிலரி கிளின்டன் (Hillary Rodham Clinton) ஐக்கிய நாடுகளுக்கான பெண்களின் சம உரிமைக்கு குரல் கொடுக்கும் குழுக்களால் அனைத்துலக பெண்கள் தினத்தை கொண்டாடும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் இம்மாதம் 4ம் திகதி பேசுகையில், உலகில் மிக மோசமான அடக்கு முறையாக ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியை ஆட்சி புரியும் தலிபான் (Taliban) பிரிவினர் அங்குள்ள பெண்களை மிகவும் கீழ்த்தரமான அடக்குமுறையின் கீழ் துன்புறுத்தி வருவதைக் குறிப்பிட்டார். அங்குள்ள பெண்கள் அடிப்படை உரிமைகள்கூட மறுக்கப்பட்ட நிலையில் இரும்புக் கட்டுப்பாட்டு விதிமுறைக்கு கீழ் மிக மோசமான இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்தின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றார்கள்.

முன்பு ஆப்கானிஸ்தானில் வைத்தியர்கள், ஆசிரியர்களாக பெருமளவு பெண்களே இருந்த

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# ஒரு 'பிரிகேட்' நிலைகொண்டிருந்தும் முல்லைத்தளம் வீழ்ந்தது எவ்வாறு?

சிறீலங்காவின் குறிப்பிடத்தக்க அரசியல் எழுத்தாளர்களில் T.D.S.A. திசாநாயக்காவும் ஒருவராவார். அவர் எழுதிய 'WAR OR PEACE IN SRILANKA' (பகுதி 2) புத்தகத்தில் முல்லைத்தீவு முகாம் தாக்கி அழிப்புப்பற்றி புதிய சில விடயங்களை குறிப்பிட்டுள்ளார். அவ் விடயங்களின் தொகுப்பு கீழே வருகின்றது.

1996ம் ஆண்டு நடுப்பகுதியில் அப்போதைய புதிய இராணுவ தளபதியான லெப்டினன் ஜெனரல் றோகான் தலுவத்தை, புதிய இராணுவ பொறுப்பதிகாரியான மேஜர் ஜெனரல் ஏம்சு லெனி விரத்ன, புதிய கூட்டுநடவடிக்கை தளபதியான மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரிய ஆகிய மூவரும் வன்னிக்கான இராணுவ நடவடிக்கை பற்றி கலந்தாலோசித்தவேளை, அவர்களில் ஒருவர் தானும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இராணுவ ஆளுமை குறித்து குறைவாக மதிப்பிடவில்லை. இம்மூன்று இராணுவ அதிகாரிகளும் சிறீலங்காவின் அனுபவமிக்க இராணுவப் புள்ளிகள் என்பது குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

1990ம் ஆண்டு விடுதலைப் புலிகளினால் கொக்காவில், மாங்குள இராணுவ முகாம்கள் தாக்கியழிக்கப்பட்ட போது இம் மூன்று இராணுவ அதிகாரிகளும் பிரபாகரன் ஆளுமையைப் பற்றி அறிந்துகொண்டார்கள். இம்முகாம்களை காப்பாற்றுவதற்காக இறுதிவரை புலிகளுடன் போராடிய இரண்டாம் லெப்ரினன்ட் சாலிய அலாதெனியாவுக்கு அரசு 'பரம வீர விபூசணாய' என்ற விருதினைக்கொடுத்துக் கௌரவித்தது. இந்த இரண்டாம் லெப்ரினன்ட் தனக்குக் கீழிருந்த இரண்டு 'பிளாட்டூன்' படையணிகளுடன் கொக்காவிலில் அமைந்துள்ள தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தைக் காப்பாற்றுவதற்காக பெரும் பிரயத்தனம் எடுத்திருந்தார். ஆனால் 1993ம் ஆண்டு ஒரு பிரிகேட் படைநிலைகொண்ட பூநகரி முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த மூன்று இராணுவ அதிகாரிகளும் பெரும் சஞ்சலமடைந்தனர். பூநகரி முகாமானது ஒரு பிரிகேட் படைநிலைக்கொண்டிருந்த போதும், இரண்டு பற்றாலியன் அணியினர்தான் நாகதேவன்துறை கடற்படைத் தளத்தில் நிலைகொண்டிருந்தனர். இத்தாக்குதல் மூலம் இராணுவத் தரப்பில் 613 பேர் கொல்லப்பட்டு, அல்லது காணாமல்போயும் 324 பேர் காயமடைந்தும் இருந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 469 பேர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் நாகதேவன் துறையில் இருந்த ஐந்து நீருந்துப் படகுகளையும் கைப்பற்றிச் சென்றனர். அது மட்டுமல்ல ஏராளமான ஆயுதத் தளபாடங்களும், வெடிமருந்துகளும், இரு T-55 ரக யுத்த தாங்கிகளும் விடுதலைப்புலிகளின் கரங்களில் வீழ்ந்தன.



1994ம் ஆண்டு அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளின் போது சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இதே பூநகரி முகாம்தான் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. கிளாலி நீரேரியூடாக பொதுமக்கள் பயணம் செய்வதில் உள்ள இடர்பாடுகளை எடுத்துக்கூறிய விடுதலைப் புலிகள் பூநகரியூடாக பொதுமக்கள் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என இராணுவத்தரப்பிடம் கோரியிருந்தனர். ஆனால் பூநகரித்தளத்தில் இராணுவ நோக்கம் கருதி இராணுவத்தரப்பு இதற்கு அனுமதி மறுத்தது. ஆனால் யாழ்குடா இராணுவத்தரப்பிடம் வந்ததன் பின்னர் இம்மூன்று இராணுவ அதிகாரிகளும் பூநகரித்தளம் இராணுவப் பெறுமதி அற்றதெனக் கருதி அதனை மூடுவதற்கு முடிவு செய்தனர். பாதுகாப்பு அமைச்சர் இவர்களின் முடிவிற்கு இணங்கினார்.

ஆனால் முல்லைத்தீவு முகாமானது தொடர்ந்தும் இராணுவத்தரப்பிற்கு ஒரு முக்கியமான தளமாகத்தான் இருந்தது. 25வது படையணி நிலைகொண்டிருந்த இம் முகாமானது மூடப்பட வேண்டுமா? என்பது பூநகரித் தாக்குதலையின் ஒரு கேள்வியாகப் பரிணமித்தது. பூநகரி முகாம் மீதான தாக்குதலைப் போல ஒரு தாக்குதல் முல்லைத்தீவு முகாம் மீது மேற்கொள்ளப்பட்டால் என்ன நடக்கும் என்பதையும் இராணுவத் தரப்பு உணராமல் இருக்கவில்லை. முல்லைத்தீவுத் தளமானது கிழக்குப் பக்கமாக கடலாலும், மேற்குப் பக்கமாக நீரேரியாலும் சூழப்பட்டு ஆறு கிலோ மீற்றர் பரப்பளவிற்கு நீளமாகவும், இரண்டு கி.மீ அகலமாகவும் பரந்து கிடந்த ஒரு தளமாகும். 25வது படையணி பிரிகேடியர் சிலம். பொகராவின் கட்டுப்பாட்டின் கீழ் இரு வருடங்களாக இங்கு நிலைகொண்டிருந்தது. பொகராவின் இடமாற்றத்தினைத் தொடர்ந்து கேணல் லோரன்ஸ் பெர்னாண்டோ முகாமின் பொறுப்பாளராகப் பதவியேற்றார். பொதுவாக ஒரு பிரிகேட் படையணியானது மூன்று பற்றாலியன்களை உள்ளடக்கியதாக இருக்கும். அவ் பற்றாலியன்கள் ஒவ்வொன்றிற்கு ஒரு லெப்ரினன்ட் கேணல் தரத்திலான அதிகாரி பொறுப்பாக இருப்பார். ஆனால் 1996ம் ஆண்டு ஜூலை மாதத்தில் முல்லைத்தீவிலிருந்த பிரிகேட் தொகுதியில் இரண்டு பற்றாலியன்கள் மட்டுமே இருந்தன. சிங்க றெஜிமென்டின் 9வது பற்றாலியனும் விஜயபாகு றெஜிமென்டின் 6வது பற்றாலியனும் முறையே மேஜர் குணரத்தின, மேஜர் அபிலா ஆரியசேனவின் கீழ் இருந்தன.

முல்லைத்தீவில் நிலைகொண்ட 25ம் பிரிகேடிற்கு ஒரு உண்மையான வேலை ஆளணிப் பற்றாக்குறை நிலவியிருந்தது. இந்த நிலைமை விடுதலைப் புலிகளுக்கும் தெரியும். ஆனால் மறுபுறத்தே இந்த இராணுவத்தளமானது மிக அதிகமான ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் கொண்டிருந்தது. 1996ம் ஆண்டு ஜூலை மாதம் 15ம் திகதி கேணல் பெர்னாண்டோவும், மேஜர் குணரத்தினாவும் கொழும்புக்கு நீண்ட அலுவலக வேலைகளாகச் சென்றிருந்தனர். அவ்வேளை 25வது பிரிகேட் தற்காலிகமாக மேஜர் அபிலாவின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இந்த நிலைமையை விடுதலைப் புலிகள் மிகத் துல்லியமாக கணித்துக்கொண்டார்கள். தாக்குதலுக்கான திட்டத்தினையும் தயார்ப்படுத்தினார்கள். 18ம் ஜூலை 1996 நள்ளிரவுக்கு சற்றுப் பின்னர் விடுதலைப் புலிகளின் கடலணியான கடற்புலிகள் முகாம் மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இராணுவத் தளத்தை ஊடறுத்து புலிகளின் அணிகள் புகுந்தன. மறுபுறத்தே புலிகளின் மோட்டார்களும், ஆட்டிலெறிகளும் இராணுவத் தளத்தின் வடக்குத்தெற்குப் பகுதிகளை இலக்காகக்கொண்டு தாக்குதல்களை மேற்கொண்டன. இத் தாக்குதல்களின் விளைவாக இராணுவத் தளத்தின் நான்குபக்கங்களிலும் விடுதலைப் புலிகளின் பிடி இறுகியதுடன் தளம் அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இராணுவத்தினருடைய தொலைத் தொடர்பும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் செயலிழந்துபோனது. தளத்தின் மத்தியில் இருந்த பிரிகேட் தலைமை அலுவலகம் கடற்புலிகளின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. 24 மணித்தியாலங்களிற்கு மேலாக நடந்த கடும் சமரின் விளைவாக 1187 துருப்பினர் கொல்லப்பட்டு அல்லது காணாமல் போனதாக சொல்லப்படுகிறது. இத் தொகையில் அதிகாரிகளும் அடங்குகின்றார்கள். ஒரு கப்பல் கொள்ளளவான ஆயுதங்களும், தளபாடங்களும், வெடிமருந்துகளும் விடுதலைப் புலிகளின் கரங்களில் வீழ்ந்தன. அதாவது சிறீலங்காவின் இராணுவ வரலாற்றிலேயே ஒரு பிரிகேட் நிலைகொண்டிருந்த இராணுவத் தளமொன்று விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட வரலாறும் பதிவும் இடம்பெற்றுக்கொண்டது. இத்தாக்குதல்களில் முக்கிய பாத்திரமாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளே இருந்தார்கள்.

முகாம் தாக்கியழிக்கப்பட்ட மறுநாள் காலை ஜெனரல் வீரசூரியா தாக்குதல் உலங்குவானூர்தி ஒன்றில் திருமலையிலிருந்து அவசரமாக பலாலி விரைந்தார். அங்கு கிழக்குக் கட்டளைப்பிராந்தியப் பொறுப்பானரான நீமல் அட்பிரல் டிகேதிசாநாயக்காவுடன் முல்லைத்தீவு முகாமை மீட்டெடுப்பது சம்பந்தமாக அவசர ஆலோசனைகளை நடாத்தினார். அவ் ஆலோசனைகளின்படி - முல்லைத்தீவு முகாமினை மீட்கும் திட்டமொன்று தயாரானது.

(தொடரும்)

(14ம் பக்கத் தொடர்ச்சி)

## அனைத்துலக...

கள். ஆனால் இப்போ தலிபான் ஆட்சியில் பெண்களுக்கான பாடசாலைகள் யாவும் மூடப்பட்டு விட்டன. கல்வி அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. அதே போல பெண்கள் நோய் காரணமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டாலும் அங்கு இறக்கின்றார்கள். ஏனெனில் அங்கு பெண் வைத்தியர்கள் இல்லை. அதேவேளை ஆண் வைத்தியர்கள் பெண்களுக்கு வைத்தியம் பார்க்க அனுமதி இல்லை. இதைவிட பெண்கள் நடக்கும் போது ஆடை மறைக்கப்படாது கீழ் கணுக்காலின் ஒரு பகுதி வெளியில் தெரிந்தால் இரும்பு கம்பியால் குத்திகாலில் மிக மோசமாக அடிக்கப்படுகிறார்கள். இதை இனிமேலும் கலாச்சாரம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. இது ஒரு கிரிமினல் குற்றம் என்றே சொல்ல வேண்டும்.

இதே போன்று தாய்லாந்தில் ஒன்று தொடக்கம் இரண்டு மில்லியன் இளம் பெண்கள் ஒவ்வொரு வருடமும் பெற்றோரால் விபச்சாரத்திற்கென விற்கப்படுகிறார்கள். இப்படியான பெற்றோர்கள் இலகுவாக அடையாளம் காணப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் வீட்டில் 'சற்றலைட் டிஷ்' பூட்டி இருக்கும். அல்லது வீட்டை பெரிதாகக் கட்டியிருப்பார்கள். விபச்சாரத்திற்கு பாவிக்கப்பட்ட பின் HIV AIDS வந்த பிற்பாடு கைவிடப்பட்டு தானாகவே வீட்டுக்கு திரும்பி வந்த இளம் பெண்களையும் தான் சந்தித்ததாகச் சொன்னார்.

இது தவிர உக்ரேனில், இன்னோர் இடத்தில் இதைவிட சிறந்த எதிர்காலம் உள்ளது என அழைத்துச் செல்லப்பட்ட எல்லா இளம் பெண்களும் என்ன இடம் என்று இல்லாமல் போய் விட்டார்கள். அவர்களை பிறகு காணவேயில்லை, என்றுசொல்லக் கேள்விப்பட்டதாகவும் சொன்னார்.

ஆகவே, உலக அரங்கிலும் சரி, எமது தமிழ் ஈழத்திலும் சரி உண்மையான ஆண்-பெண் சமத்துவம் என்பது விதிகளாலும், கோட்பாடுகளாலும், மதங்களாலும், கல்வியாலும், பொருளாலும் வருவதில்லை. அது மனங்களுக்கிடையேயுள்ள புரிந்துணர்வாலும், ஆண்-பெண்ணுக்கு அப்பால் இருக்கும் 'மனிதத்துவத்தை மதிக்கும் மனப்பாங்குடன்' வரவேண்டும். 2000 ம் ஆண்டை நோக்கி காலடி வைக்கப் போகிறோம். கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக பெண் உரிமைப் போராட்டம் நடந்து கொண்டேதான் கொண்டிருக்கிறது. ஆனாலும் மனிதத்துவத்தை மதிக்கும் மனப்பாங்கு இன்னும் முழுமையாக வந்துவிட்டதெனக் கூறமுடியாது.

– சுகிர்தகலா

NÆKØB -DKS Video
Danmark பதஜேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்


Nærkøb Rejser®
Korskærvej 104
DK-7000 Fredericia
Tlf: 75915804
Fax/Tlf: 75 91 58 04

Nærkøb DK's Video
Korskærvei 104 (கோஸ்கர்வாய் 104)
DK 7000 Fredericia
Tlf: 75915804.

February 10-ம் திகதி முதல்
Nærkøb Travels®
உங்கள் பிரயாணத்துக்குரிய விமானச் சீட்டுகளை மிக மலிவான முறையில் உரியநேரத்தில் நீங்கள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் இவ்வாண்டிலிருந்து எமது ஸ்தாபனம் இந்தியா/சிங்கப்பூர் சுற்றுலாவை ஆரம்பித்துள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் இச்சுற்றுலா ஆரம்பமாகும்.
FREMMED Pas வைத்திருப்போரும் இந்த சுற்றுலாவில் கலந்து கொள்ளலாம் என்பதை மிக மிக மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறார்கள்.

ஆரம்பமாகிவிட்டது
Nærkøb Money Transfer
15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.


இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
**செல்வன் அருணன் ஆனந்தராசா, செல்வி த.ஜெகதா, செல்வன் அரிச்சந்திரன் திலீபன்** ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




# உங்கள் கைவண்ணம்



செல்வன் சூரியகுமாரன் எழிலன்
வயது: 7 1/2
தமிழ்ச்சோலை
இடம்: Evry, France.



எருது

1 எருது புல் தின்னும்.
2 எருது ஒரு மிருகம்.
3 எருதுக்கு கொம்பு இருக்கிறது
4 எருதுக்கு ஒரு வால் இருக்கிறது
5 எருதுக்கு இரண்டு கண்கள் இருக்கிறது

# கட்டுரை முற்றம்

## வெளிநாடுகளில் தமிழின் முக்கியத்துவம்

வெளிநாடுகளில் வசித்துக் கொண்டிருக்கும் நாங்கள் கட்டாயமாக தமிழைக் கற்க வேண்டும். தமிழை நாங்கள் கற்றால் எங்கள் நாட்டிற்கு நாம் செல்லும்போது, எங்கள் உறவினர்களுடன் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் தமிழில் கதைத்துக்கொள்ளலாம். தமிழை எழுத வாசிக்கத்தெரிந்து கொண்டால் எங்களுடைய சொந்தக்காரர்களுக்குக் கடிதம் எழுத முடியும். தமிழை விருப்பத்துடன் படித்தால் எங்களுடைய பரம்பரைக்கும் நாம் சொல்லிக்கொடுக்கலாம். அப்படியில்லாவிட்டால் தமிழ் அழிந்துவிடும்.

நமது கலாச்சாரத்தைத் தெரிவதற்குத் தமிழ் முக்கியமானது. தமிழை நன்றாகப் பேசப் பழகினால் எமது பெற்றோர் தமிழில் சொல்வதை நாம் புரிந்துகொண்டு இங்கு பிரெஞ்சில் கதைப்பதை விளங்கப்படுத்தலாம். நாம் தமிழ் சரித்திரத்தைத் தெரிந்துகொண்டால், வெளி நாட்டுக்காரர்களுக்கு அவர்களுடைய மொழியிலேயே தமிழை அறிமுகப்படுத்தலாம். இதனால் தமிழ் வளரும்.

தமிழை நன்றாகப் படித்தால் இங்கு நடைபெறும் உயர் பரீட்சையில் நமது தாய்மொழியையும் ஒரு முக்கிய பாடமாக எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பத்திரிகை மூலமாக நாம் அறிந்துகொள்கிறோம். இதன் மூலம் எம்முடைய எதிர்காலமும் முன்னேறும். ஆகவே வெளிநாடுகளில் இருக்கும் நாம் யாவரும் தமிழைப்படித்து அழியாமல் பாதுகாக்க வேண்டும். இதனால் தமிழ் மக்களின் தொகையும் கூடும்.

**தமிழ் வாழ்க**

*செல்வி சின்னத்துரை குருசலா*
*தமிழ்ச்சோலை*
EPINAY VILLETANEUSE, FRANCE.

# நூலக முற்றம்

## ‘எங்கள் தமிழ்ச்சோலை’

சிறுவர் முற்ற மருமக்களே!

பிரான்ஸ் தமிழ்ச்சோலை அமைப்பினர் ‘எங்கள் தமிழ்ச்சோலை’ என்னும் சிறுவர் மலர் ஒன்றினை வெளியிட்டுள்ளனர். பிரான்ஸ் நாட்டில் இயங்கிவரும் தமிழ்ச்சோலை பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களையே முற்றுமுழுதாகக் கொண்டு இம்மலர் வெளிவந்துள்ளது. மிகவும் நேர்த்தியான வடிவமைப்புடன், பல பிரான்ஸ்வாழ் தமிழ்ச்சிறார்களின் பல்வேறு ஆக்கங்களையும் தாங்கி வந்துள்ள இம்மலரை சிறுவர் முற்ற மருமக்களும் பார்ப்பது நன்றாகும். ஒரு தமிழ்ச்சோலைக்கு ஒரு பக்கம் என்ற வகையில் 27 பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச்சோலை அமைப்பின் மலர் வெளியீட்டு முயற்சியினை சிறுவர் முற்றம் சார்பாக வாழ்த்தி வரவேற்கிறோம்.




# கவிதை முற்றம்

## ஒன்றும் ஒன்றும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு.
இரண்டும் இரண்டும் நான்கு
இனிப்பாய் இருக்கும் தேங்காய்.
மூன்றும் மூன்றும் ஆறு
வேலை செய்தால் சோறு.
நான்கும் நான்கும் எட்டு
நன்றாய் பாடுவார் பாட்டு.
ஐந்தும் ஐந்தும் பத்து
அன்பே நமது சொத்து.

த. ஆரணி
வயது 9

# அறிவியல் முற்றம்

சொற்சிதறல் எண் - 20

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

பிள்ளைகளே!

சொற்களைக் கண்டுபிடிக்க முயன்றுபாருங்கள். முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

**இடமிருந்து வலம்**

1. 1-5 தமிழ் ஈழச்சிறுவர்களைப் பாடிய பாரதிதாசனை இப்படியும் அழைப்பர். பாடல்களின் மன்னர் என்று பொருள்.
2. 9-10 வானிலிருந்து பொழிவது. இங்கு மாறியுள்ளது.
3. 12-15 முழுக்க முழுக்க கைகளால் செய்யும் வேலையை இப்படிச் சொல்வர்.
4. 16-20 நீங்கள் எதைப் பற்றியாவது சிந்தித்துக்கொண்டிருப்பதை இப்படிச்சொல்வர். இங்கு மாறியுள்ளது.
5. 22-25 துள்ளவைக்கும் பாடல்களை இப்படியும் சொல்வர்.

**மேலிருந்து கீழ்**

6. 1-21 இந்தியாவின் தென்பகுதியை ஒரே காலத்தில் ஆட்சிபுரிந்த மூன்று தமிழ் மன்னர் பரம்பரைகளில் ஒரு பரம்பரை. மீன் கொடிக்கு உரியவர்கள்.
7. 2-12 புலியை இப்படி அழைப்பர். புலி வீரர்களையும் இப்படி அழைப்பர்.
8. 4-9 முளைப்பதை இப்படியும் சொல்வர். இங்கு தலைகீழாக உள்ளது.
9. 14-24 ஒருவகை கிழங்கின் பெயர்.
10. 10-25 கோயில்களில் இதனைக் கேட்கலாம்.

**சொற்சிதறல் எண் பத்தொன்பதின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| பா | ர | தி | யா | ர் |
| லை | க் | கா | ச | க |
| வ | ள | க் | க | ம் |
| ன | | லை | ம் | ப |
| ம் | ஆ | ந | வ | ன் |

# சுயசரிதை படியுங்கள்


**செல்வன் ரஜீபன் சிவராசா**



வயது 12
இலங்கையில் பிறந்தவர்
பிரான்சிற்கு வந்தநாள்
17.06.1994
CM1 பயின்று வருகிறேன்
அதன்,
ஞாயிற்றுக்கிழமைகளில்
ஆர்வத்தோடு தமிழ் பயின்று வருகிறேன்.

நான் ஒரு சிறு பிள்ளையாக மண்ணிலே விதைக்கப்பட்டேன். எஜமானி அம்மாள் என்னைக் கண்ணும் கருத்துமாக நீருற்றி பசளையிட்டு ஆடு, மாடுகள் கடிக்காமல் வளர்த்தாள். நான் காலவில் வளர்ந்து விட்டேன். திடீரென ஒரு நாள் என் கிளையிலிருந்து பாளை விரிந்தது. எஜமானி அம்மாள் என்னைப் பார்த்து சந்தோசப்பட்டாள். பாளை, சிறு குரும்பையாக மாறி, பெருங் குரும்பையாகி, பின்பு வழுக்கல், அதன் பின்பு முட்டுக்காய்ப்பருவத்தை அடைந்தது.

சிறிது நாட்களின் பின் தேங்காயாகி பழுத்து காம்பைவிட்டு கீழே விழுந்தது. ஒரு நாள் வானத்திலே பல விமானங்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. ஒரே இரைச்சல், எனக்கு மேலால் இரண்டு ஹெலிகப்டர்கள் பறந்து கொண்டிருந்தன. திடீரென்று ஹெலிகப்டர்களிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. எனக்கு ஒரே பதற்றம். என் மீது வேட்டொன்று விழுந்தது. என் கிளைகள் எல்லாம் எரிந்து, சிதைந்து சின்னாபின்னமாகின. ஹெலியில் வந்த அரக்கன் என்னைப் பட்டமரமாக்கிவிட்டான். நான் இப்போது பட்டமரம். நான் யார் தெரியுமா? நான் தான் தென்னைமரம்.




# விருது ஒன்று வித்தானபோது...

நேரம் அதிகாலை இரண்டு மணி. அமைதியாயிருந்த அந்த வைத்தியசாலையின் முன் வீதியில் அவல ஒலி எழுப்பிய வண்ணம் விரைந்து வந்த அம்புலன்ஸ் வண்டியொன்று அமைதித் திரையைக் கிழித்தவாறே வைத்தியசாலையினுள் பிரவேசித்தது. அம்புலன்ஸ் வண்டி வந்த வேகத்திற்கேற்ப அங்கிருந்த வைத்தியசாலைப் பணியாளர்களும் அவசர அவசரமாக இயங்கத் தொடங்கினர். வாசலில் ஏற்கனவே காத்திருந்த தொண்டர்கள் ஓடிச்சென்று வண்டியிலிருந்து காயப்பட்ட போராளிகளை இறக்க, மற்றும் சில தொண்டர்கள் அவர்களைத் தாங்கிய 'ஸ்ரெச்சர்' களை உரிய சிகிச்சை அறைகளை நோக்கி வேகமாக இழுத்துச் சென்றனர்.

உடலின் பல பகுதிகளிலும் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் அன்று அங்குகொண்டுவரப்பட்டிருந்த பன்னிரு போராளிகளில் ஆண்,பெண் இருபாலாருமிருந்தனர். வைத்தியர்களும், தாதிகளும் தொண்டர்களுமாகப் பல்வேறு பணியாளர்களும் தத்தமது பங்களிப்பை ஆற்றி அவசர சிகிச்சைகளை அப்போராளிகள் பெறுவதற்கு உதவிக்கொண்டிருந்தனர்.

இது அவசர நிகழ்வாகக் காணப்பட்டபோதிலும் அந்த வைத்தியசாலையைப் பொறுத்தவரை மிகவும் பழக்கப்பட்டதொரு நிகழ்வாகிவிட்டதெனலாம். எம் மண்ணை மீட்பதற்காய் எதிரியுடன் யுத்தம் புரிந்து தம் உடலில் விழுப்புண்களைச் சுமந்தவாறு ஏற்கனவே வந்திருந்த பல போராளிகள் அங்கு வைத்தியசாலைப் படுக்கைத் தொகுதிகளில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தனர். அவர்களைப் பராமரிக்கும் பணியில் பல தாய்மாரும், சகோதர, சகோதரியரும் தினமும் ஈடுபடுவது வழக்கமான நிகழ்வுகளே. நாம் எதிரியை மிகவும் அண்மித்துவிட்ட இப்போராட்ட சூழ்நிலையில் போராடுவதற்கேற்ற உடல் நிலையை-மனநிலையைப் பெற்றுக்கொள்ளாத பலர் தமது பங்களிப்பை இவ்விதத்தில் செய்துகொள்ள முன்வந்தபோது, அவர்களது பங்களிப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வைத்தியசாலை அருகாமையிலேயே அவர்களுக்குத் தங்குமிட வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருந்தன.

பல மைல் தூரத்துக்கப்பாலிருந்து இப்புனிதப் பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்து வந்திருந்தவர்களில் ஒருவர் தான் 'மீனாட்சி அம்மாள்' ஆனையிறவுப்போர் ஆரம்பித்ததிலிருந்து பராமரிக்கும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட அவர், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த அனைத்துப் போராளிகளுடனுமே தாயாகவே பழகினார். அதனால் 'அம்மா' என்னும் அன்புப் பெயராலேயே அவர்கள் எல்லோராலும் அவர் அழைக்கப்பட்டார்.

தன் மூத்த மகளை, மண்ணின் மீட்புக்காய் மனமுவந்து கொடுத்த அந்த வீரத்தாயுடன் தம்பதுக்கும் அதிகமான பெண்கள் அந்த போராளிகள் பராமரிப்புப் பணியாளர்களுக்கான விடுதியில் தங்கியிருந்தனர். அம்மாள் ஓய்வாக இருக்கும் வேளைகளில் விடுதியில் அவரைச் சூழ்ந்துகொள்ளும் பெண்கள் கூட்டமே அவரது அடைக்குச் சாட்சியாக விளங்கிற்று. அங்கு எதிர்க்கு எதிரான யுத்தம் எங்கும் தொடங்கியிருந்த நேரமானபடியால் இரவு, பகல் இருநேரங்களிலும் பராமரிப்புப் பணி தேவைப்பட்டது. ஆதரவாளர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்பதற்காகப் பகலில் பணிபுரிந்தவர்களை விடுத்து இரவில் ஏனையோர்க்குச் சந்தர்ப்பம் வழங்குவார் எமது பொறுப்பாளர். இரவு, பகல் என்று பாராது தமது வீடு, வாசல்களையும் விட்டு வந்து நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பல நாட்களாகப் பராமரிப்புப் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் பெண்குலத்தின் விழிப்புணர்வை எண்ணிப் பார்த்தபோது அது விடியலுக்கான அறிகுறிபோலவே தென்பட்டது.

அன்றைய இரவு பெண்போராளிகளுக்கான படுக்கைத் தொகுதியில் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பெண்கள் குழுவில் நானும் இணைந்திருந்தேன். அவசர சிகிச்சைகளின் பின் போராளிகள் அனுமதிக்கப்பட்ட வார்ட்டுக்களில் அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்து கொண்டிருந்தோம். கண்விழித்து நின்றிருந்த நாம், அவர்களது கண்ணயர்வில் திருப்தி கொண்டோம். காயத்திற்கு மருந்து கட்டிய நிலையில் கண்ணயர்ந்துகொண்டிருந்த போராளி ஒருவரை நெருங்கிய மீனாட்சி அம்மாள், சிறிது நேரம் கண் இமைக்காது அப் போராளியையே பார்த்துநின்றதை என்னால் அவதானிக்க முடிந்தது. என்னருகில் வந்த அம்மாள் மெதுவாக, 'என்ரை மகள் திவ்வியாவும் இவளைப்போலவே இருப்பா. படுத்திருக்கும்போது சரியா திவ்வியாவைப்போலவே இருக்கிறா'.... கூறிக்கொண்டிருந்த அப் போராளியின் உடலில் மெல்லிய அசைவு தெரிந்தது. அருகில் விரைந்துசென்ற அம்மாள், அவரது தலையைத் தடவிக் கொடுத்தவாறே, கையிலிருந்த விசிறியால் விசிறிக்கொண்டிருந்தாள். அவ்வருகில் தன் மகளைக்கண்டு திருப்திப்படும் அம்மாளைக் காணத் திருப்தியாக இருந்தது எனக்கு. அடிக்கடி அவர் என்னிடம் கூறிக்கொள்ளும் அந்த வாக்கியங்கள் அப்போது என் நினைவுக்கு வந்தன.

'பிள்ளை என்ரை பிள்ளையை நானே கூட்டிக்கொண்டுபோய் பெண்கள் பாசறையிலை ஒப்படைச்சனான். இப்ப அவள் பயிற்சி முடிஞ்சு ஆனையிறவிலை நிக்கிறாளாம். என்ரை பிள்ளை காயப்பட்டாலோ அல்லது வீரச்சாவு அடைந்தாலோ நான் கவலைப்படமாட்டேன். மண்ணுக்குச் செய்த கடமையாய் நினைக்கப் பெருமைப்படுவன். அது தமிழர் ஒவ்வொருத்தரையும் கடமைதானே... ஆனால் நான் இதுவரைக்கும் ஒரு முறையாவது அவளை அவளின்ரை உடுப்போட காணேல்லை என்றதுதான் எனக்குக் கவலை. அந்தக் கோலத்திலை நான் அவளைக் காணவிரும்பினனோ அந்தக் கோலத்தோட இன்னும் நான் காணேல்லை. அது ஒண்டுதான் எனக்குக் கவலை...'சொல்லும்போதே அம்மாவின் குரலில் ஏமாற்றம் தொனிக்கும்.

நியாயமான ஆசைதான். தம்மகளை வைத்தியராக-பொறியியலாளராக இன்னும் எத்தனை எத்தனையோ உயர்ந்த அந்தஸ்துகளில் காணத்துடிக்கும் பெற்றோர்கள் பலர் வாழும் இம் மண்ணில் தன் மகளை ஓர் வீரவேங்கைக்குரிய சீருடையில் காணத்துடிக்கும் ஓர் இலட்சியத் தாயாக மீனாட்சி அம்மாள் என் மனதை நிறைத்து நின்றாள். அவளது ஆசை நிறைவேற நான் மனதாரப் பிரார்த்தித்துக்கொண்டேன்.



பதினோராம் வார்ட் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த கடிகாரம் ஆறு தடவை அடித்து ஓய்ந்தது. புதியவர்கள் பணியில் ஈடுபடுவதற்காக நாம் விடைபெற்றுக்கொண்டோம். ஆனால் மீனாட்சி அம்மாளோ இரவு முழுவதும் கண்விழித்த சோர்வேதுமின்றி, அவர்களைப் பிரியமுடியாத மனநிலையுடன் பொறுப்பாளரிடம் சென்று தொடர்ந்து அன்றைய பகலும்தான் பணியாற்றுவதற்கு அனுமதியேற்று வந்தார். அம்மாளின் சுறுசுறுப்பும் அவரது மனநிலையும் காரணமாகப் பொறுப்பாளரும் அவருக்கு அனுமதி வழங்கியிருந்தார் பொறுப்பாளர்.

களத்திலிருந்து வந்த போராளிகளை எண்ணிப் பார்த்தபோது கனத்த என் நெஞ்சம்-மீனாட்சி அம்மாளை எண்ணிப்பார்த்தபோது இலேசிப்போனது. விடுதிக்குச் சென்று, காலைத் தேனீர் அருந்திக்கொண்டிருந்த நான் எங்கோ தொலைவிலிருந்து காற்றில் மிதந்துவந்து 'போயர் இன்னும் ஓயவில்லை. எங்கள் தமிழ் ஈழ மண்ணில் புலிகளின்...' என்ற பாடலில் என்னை மறந்திருந்தேன். விடுதிக்கு முன் வீதியில் வேகமாக வந்து நின்ற மோட்டார் சைக்கிள் ஒலி என் சிந்தனையைக் கலைத்தது. அவசர, அவசரமாக இறங்கி விடுதியை நோக்கி வந்த இளைஞன் ஒருவன் மீனாட்சி அம்மாளை விசாரித்ததுடன், அவரைத் தான் அவசரமாகச் சந்திக்க வேண்டுமென்பதையும் தெரிவித்தபோது, ஏதோ விபரீதம் நடந்து விட்டதாக என் உள்மனம் உணர்த்தியது. அதனால், காரணத்தை அவசரமாக வினவினேன். அவ்விளைஞனிடமிருந்து வந்த வார்த்தைகள் என் செவிப்பட்டபோது எனக்கு ஓவென்று கதறியழவேண்டும் போலிருந்தது.

மீனாட்சி அம்மாளின் மகள் திவ்வியா ஆனையிறவுக் களத்தில் எதிரிப்படையை அழித்து வீரச்சாவை தழுவியதாகவும் - அம்மாளை அவளது சொந்த ஊரான வன்னி மண்ணிற்கு அழைத்துச் செல்லவே அவ்விளைஞன் வந்திருந்தான். மீனாட்சியம்மாள் கூறுவதுபோல திவ்வியாவின் மறைவு கூட எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் இலட்சியத் தாயின் இறுதி ஆசையை நிறைவேற்ற அந்தப் போராளியின் உடலை மீட்க முடியவில்லை என அறிந்த போது என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாமலிருந்தது. விடயத்தைக் கூறி அம்மாளை உடனே அழைத்துவரும் பணி, பொறுப்பாளரினால் எனக்குத் தரப்பட்டது. விளக்கமாக விடயத்தைக் கூறவேண்டாமெனவும், வேறு ஏதாவது கூறி அவரை அழைத்துச் செல்ல உதவும்படியும், ஊருக்குச் சென்ற பின் தான் கூறுவதாகவும் அவ்விளைஞன் கேட்டுக்கொண்டான். என் கால்கள் வைத்தியசாலையை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கின. அம்மாளின் நிராசையான அந்த ஆசை எனது காதில் ஒலித்துக்கொண்டேயிருந்தது. 'எந்தக் கோலத்தோட அவளை நான் பார்க்க விரும்பினேனோ அந்தக் கோலத்திலை இன்னும் நான் காணேல்லை.... அதுதான் என்ரை கவலை...' திரும்பத் திரும்ப என் காதில் ஒலித்த அந்த வார்த்தைகளை ஜீரணிக்க முடியாதவளாய் வைத்தியசாலையை அடைந்தேன். அங்கு சாந்தமே வடிவாய் போராளிகளைப் பராமரிப்பதிலும், ஆறுதல் வார்த்தைகள் கூறுவதிலும் ஈடுபட்டு நின்ற அம்மாளை அணுகி, 'அம்மா, உங்கட வீட்டுக்குக்கிட்ட இருக்கிற ஒரு தம்பி ஊருக்குப் போறாராம். நீங்க வீட்டை இருந்துவந்து கனநாள் என்டபடியால் விருப்பமெண்டால் போய்வாட்டு வரச்சொல்லி பொறுப்பாளர் உங்களைக் கூட்டி வரட்டுமாம் என்றேன் அமைதியாக.

'ஐயோ பிள்ளை என்ரை குஞ்சுகளை இந்த நிலையிலை இஞ்சை விட்டிட்டு நான் போறதோ... இன்னும் கொஞ்சநாள் கழிச்சு சுகம் கிடைச்சால் போகிறேன் எண்டு சொல்லுங்கோ' அம்மாளின் குரலில் உறுதி தொனித்து நின்றது. எனக்கோ தர்மசங்கடமான நிலை. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருந்த நான். அம்மாளுக்கு விளங்காத வகையில் ஏனைய சில பராமரிப்புப் பணியாளர்களுக்கும், போராளிகளுக்கும் நிலைமையைக் கூறினேன். அம்மாளின் உறுதியான மனதை நான் ஏற்கெனவே உணர்ந்துகொண்டவள். மகளின் மறைவை

(தொடர்ச்சி 25-ம் பக்கம்)


அன்பு




சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)




இந்தியா 45 நிமிடம்

பிரான்ஸ் 200 நிமிடங்கள்

(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை)

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 45 நிமிடம் | பிரித்தானியா | 150 நிமிடம் |
| கனடா | 150 நிமிடம் | அமெரிக்கா | 150 நிமிடம் |
| தாய்லாந்து | 55 நிமிடம் | ஜேர்மனி | 120 நிமிடம் |
| ஹொங்கொங் | 100 நிமிடம் | அவுஸ்திரேலியா | 100 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் | பிலிப்பைன்ஸ் | 50 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் | அல்ஜீரியா | 70 நிமிடம் |
| சுவிஸ் | 120 நிமிடம் | மொரோக் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 55 நிமிடம் | பெல்ஜியம் | 125 நிமிடம் |
| சிங்கப்பூர் | 55 நிமிடம் | பிரான்ஸ் (கைத்தொலைபேசி) 100 நிமிடம் | |
| துனிசியா | 70 நிமிடம் | | |

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

லண்டன், ஜேர்மனி, சுவிஸ் நாடுகளுடன் இத்தாலி, ஹொலண்ட்
ஆகிய நாடுகளிலும் எமது தொலைபேசி அட்டை சேவையில் உள்ளது.

சகல நாடுகளுக்குரிய தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**GNANAM Telecom Center**

195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.

Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14

M°: La Chapelle / Gare du Nord

# கலைந்த சொற்கள் எண்: 26

கீழ் உள்ளவற்றில் 126 சொற்கள் கலைந்திருக்கின்றது. சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். இச்சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | க | ல் | பு | மீ | ம் | ப | ம் | கு | ழ | ப் | ப | ம் | த | தீ |
| ச | டி | பி | த | ம் | ல | இ | ழ | ப் | பு | ப் | த | மி | ம் | ப |
| கு | பு | ப் | ற | தி | ரு | ப் | ப | ம் | ள | வா | டி | க | பி | ம் |
| ன | பு | றி | பு | ப் | ப | து | ப | ணை | க் | கா | ர | ன் | த | ன |
| ம் | ம் | ப் | பீ | ம் | பு | ப் | தி | ம | ல் | ந | தா | த் | ட | த |
| பு | வ | ட | மு | ம் | அ | ப் | ம | ரு | ந் | து | ரு | வ | ம் | வ |
| சி | ம் | ன் | மா | ச | எ | மை | சீ | தி | க | தி | ன | க | ர | ன் |
| சை | ண | ல | கு | ச் | து | ம | னி | ரி | ம் | க | ர | கி | பு | ம் |
| ம் | லி | ந் | சி | து | ப | வ | ச | ம் | ப | ணை | ம் | ம் | ச | ம் |
| ம் | த | ல் | ம் | தி | தா | வ | ள | ம் | ம் | ம | ர | க | த | ம் |
| லை | ள | லா | ல | ரு | ந் | து | த | ல் | க | வ | க | ம | வ | ள |
| ல் | ல் | க | ம் | ப | ம் | மு | ம் | வ | டி | வ | ல் | ர | ம் | வ |
| எ | க | க | க | கை | ப | க | க் | வு | ன | கு | தி | ன | ம் | க |
| த | ணி | ள | க் | வி | தா | து | க் | க | ம் | ப | ன் | க | ன் | வு |
| வ | வ | க | ள | சி | ம | க | வ | பி | ல் | ச | க் | ன | டி | இ |
| ம் | ப | ம் | வி | தி | ர | ட் | சி | ட | ன் | ல | ம் | வ | ரு | து |
| ச | சி | ர | ல் | சி | சி | ம | டி | வ | க | ன | ன | வ | ப | ல |
| ம் | ன் | தி | த் | ற | கு | ணை | தா | அ | தா | ம் | ர் | ம் | ல் | ப |
| ர | ன | த் | ர | ட | ற் | ம் | ம் | ன | க | த | வா | ன | பா | வி |
| ம | ம் | ரி | ம் | கு | ற | வி | ன் | க் | ம் | ல | க | ச | ட | ர் |
| பு | ம் | த | பா | வ | ம் | அ | க | ங் | கா | ர | ம் | ஆ | ல் | இ |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| திருமணம் | திவாகரன் | வரம்பு | மருந்து | வழவுக்கரசி | பிறப்பு | இருவர் | தருவம் | குழப்பம் |
| சிரமதானம் | அகலம் | மூக்கல் | குற்றம் | கலக்கம் | வடகம் | திரட்சி | எசமான் | பதிதல் |
| குடில் | தாவரம் | பாதம் | சிவிகை | தம்பி | களம் | அகங்காரம் | நம்மதிப்பு | திருக்கம் |
| இருப்பிடம் | சிலம்பு | திருப்பம் | குமடம் | கம்பம் | சின்னம் | துருவம் | அட்டம் | சகலம் |
| ஆசனம் | மகுடம் | விற்றல் | எச்சில் | சாம்பார் | துவாளல் | மகரம் | இல்லாமல் | திரவம் |
| வடிவு | வாசல் | மிதப்பு | தாகம் | நிலம் | நகல் | மந்திரம் | கரணம் | நாவணி |
| பழம் | கழகம் | கிரகம் | அட்ட | நரகம் | தகனம் | சிக்கல் | கறத்தி | தூசம் |
| விம்பம் | வரம் | கரம் | விலகும் | பாடல் | பரிசிப்பு | மணம் | வருந்துதல் | பீதப்பு |
| வனம் | பாவம் | தீபம் | எல்லை | குழ | திகதி | மரணம் | பின்னர் | பருவம் |
| மரகதம் | நாட்டு | துக்கம் | இழப்பு | வழலம் | எல்லாம் | விளக்கம் | வாலவிசை | தரித்திரம் |
| மட்டி | விறகு | கன்னம் | வணிகம் | மனதில் | கலகம் | மரம் | சிவப்பு | சதுர்த்தவை |
| சன்னம் | கக்கம் | நந்தினி | வதனம் | வம்சம் | சலனம் | புரம் | நடம் | திறப்பு |
| சதுரம் | பணம் | மதம் | முன்னம் | கழவாணம் | துரும்பு | வறுமை | கம்பன் | வசம் |
| பலது | வாதம் | தலம் | முந்தி | பாசம் | தாபம் | சின்னம் | அன்னதானம் | பணக்காரன் |

பெயர்: ..................................

முகவரி: ..................................

..................................

..................................

பிறந்த நாள்: ..................................

சந்தாதாரராயின் சந்தா எண்: ..........


கலைந்த சொற்கள் எண்-26 இற்கான விடைகள்
வந்து சேரவேண்டிய
கடைசி நாள்: 19.03.1999

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010
Paris, France.

## கலைந்த சொற்கள் எண் - 25 விடைகள்



ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 180 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.
அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.

1) அன்னா ஜெயக்குமார்
93000 Bobigny
France.

2) செல்வி வாஹினி குகதாசன்
Deptford,
London SE84AN.

3) திருமதி கிரிஜா சிறீகரன்
Eastham,
London E6 1Px.

4) செ.திலோஸ்காந்
4341 ES Prinsenbeek,
Holland.

5) ரூபா சோதிலிங்கம்
6230 Rødekro,
Danmark.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-26 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-27ம், 25 - 31 மார்ச் 99 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சவேபூ. சவுந்தரராஜா

10வது ஆண்டில் காலடிபதிக்கும்

இமாலயாவின்

தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்

100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே

உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....

கடுகதி பார்சல் சேவை

❀ பிரியாணி ❀ கொத்துரொட்டி ❀ இடியப்பப்பிரியாணி ❀ தந்தூரி வகைகள் ❀ நாண் ❀ சீஸ்நாண் ❀ சப்பாத்தி ❀ தோசை ❀ றோள்ஸ் ❀ சோறு - கறி

இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51

றெஸ்ரோறன் இமாலயா

9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

Photo Arunthy

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் சிறந்த முறையில் புகைப்படம் பிடித்திட

போட்டோ அருந்தி

தொடர்பு: அருந்தி

தொலைபேசி: 0143284617 (Paris)

* நீண்டகால அனுபவத்துடன் நவீன புகைப்படக் கருவிகள் மூலம் புகைப்படம் பிடித்திட உடன் தொடர்பு கொள்ளவும்.

Pub




நீ காற்று.. நான் மரம்... எது சொன்னாலும் தலையாட்டுவேன்...!!

பெடியளொருத்தன்ர கதையைக் கேக்க எனக்கு உந்த சினிமாப்பாட்டுத்தான் ஞாபகத்திலை வருகுது பாருங்கோ. கிட்டடியிலை தான் இவனும் கடல் கடந்து பலமைல் தாண்டி இன்னொரு நாட்டிலை 'ஸ்பொன்சர்' பண்ணி கூப்பிடவேணும். அப்பிடி 'ஸ்பொன்சர்' பண்ணிக்கூப்பிட்டு அங்கை போய்ச்சேர்ந்தவையை அடைபாளம் கண்டு பிடிக்கிறதும் வலு சுலபமாம்! வீதியாலை நடந்து போறதை வைச்சே இவையள் எப்பிடி கலியாணம் கட்டினவையெண்டு அங்கையிருக்கிற எங்கட சனங்கள் அடிச்சுச் சொல்லிப் போடுங்களாம்! வீதியாலை நடந்து போகேக்கை மனிசிக்காரி முன்னாலை போக புருஷன்காரர் பின்னாலை 'பாக்' கையும் காவிக்கொண்டு ஒருத்தருக்கு பின்னாலை ஒருத்தரெண்டு வரிசைகட்டிப் போனா சனங்கள் சொல்லுமாம் அவதான் அவரை 'ஸ்பொன்சர்' பண்ணிக் கூப்பிட்டிருக்கிறா எண்டு. வரிசைக்கும் பந்த விழுத்திக்கலைக்கும் சம்பந்தம் இல்லை பாருங்கோ. அங்கை போறதுக்கு 'ஸ்பொன்சர்'தான் காரணம். ஆனா இங்கை பொலிஸ்காரர் எல்லோ வரிசைகட்டி கூட்டிக்கொண்டு போகினம். சிறங்கு சொறிஞ்ச கையும், பேனை பிடிச்ச கையும் சும்மா இராதெண்ட கணக்கா.., இவையளுக்கும் போறவாற இடங்களிலை கையை வைச்சுக்கொண்டு சும்மா இருக்க மனம் வராது காண்டியளோ. பதாவது முகப்பாத்திலை தொடங்குவினம், கடைசியா அடிதடியிலை வந்து நிப்பினம். அண்டைக்கும் உப்பிடித்தான் உங்கை பொரு தமிழ் சாப்பாட்டுக்கடையிலை சாப்பிடப்போயிருக்கினம்[?]. போனபிடி எங்கையாவது நாலுபேர் கூடினாத் தான் எதையாவது அடிச்சுடைச்சு தங்கட வீரத்தனங்களை வெளிக்காட்டுவினம்.

சரியொண்டு இந்த வீரர்மாரை காவல் துறையினர் வரிசைகட்டி காவல்நிலையத்துக்கு கொண்டுபோனா அங்கை நம்ம எந்தனவே எங்கட ஆளொருத்தர் அதிகாரங்களோட நிக்கிறார். என்னெண்டு கேட்டால், இன்னொரு நாட்டுக்காரர் அவரை பதம்பாத்து அனுப்பியிருக்கிறார். இவர் அவருக்கு என்ன செய்தாரோ? கொண்டுவந்தது இவரைத்தானே. அதோட முடியேலை கொஞ்ச நேரத்திலை வேறையொரு பிரச்சனையிலை ஈடுபட்டவையெண்டு இன்னும் ரெண்டுபேரை கொண்டு வந்திருக்கினம். அவையளும் எங்கட சனம் தானாம். அண்டைக்கு ஒருமணி நேரத்துக்குள்ளை எங்கட சனங்களின்ரை பிரச்சினை மட்டும் மூண்டு வந்திருக்குதெண்டா எங்கட பெருமையை பாருங்கோவன்.

# நீ காற்று.. நான் மரம்... எது சொன்னாலும் தலையாட்டுவேன்...!!

தாண்டி இன்னொரு நாட்டிலை(?) 'விடுதலை' பெற்றுக்கொண்டு வந்தவர். கலியாணம் செய்யிறதை பெடியள் இப்ப விடுதலை என்டெல்லோ சொல்லுறாங்கள்! முன்னம் கலியாணம் செய்யிறதெண்டாலே சுதந்திரம் பறிபோய் சிறை வாழ்க்கை எண்டு சொல்லுறாங்கள் இப்ப விடுதலையெண்டு சொல்லுறாங்கள் எண்டா கால மாற்றத்திலை பெடியளும் மாறிவிட்டாங்கள் எண்டதுதான் என்ர நினைப்பு. நானும் விடுதலை பெற்றுக்கொண்டு வந்த அந்தப் பெடியனைப் பிடிச்சு என்னத்திலை இருந்து விடுதலை எண்டு கேட்டன். அதுக்கவன் தனக்கு விடுதலை என்னத்திலை எண்டு தெரியேலை, ஆனா அந்த நாட்டிலை போய் விடுதலை பெற்றாலும் பிரயோசனமில்லை, ஏனெண்டால் அங்கை இரண்டாம்தர பிரஜையாகத்தான் நாங்கள் 'நடக்க' முடியும் எண்டிறான்!

அந்த நாட்டிலை பெடியள்போய் கலியாணம் கட்டினா பெண்சாதிமார் செய்து கூப்பிட்டிருக்கிறா எண்டு. அதாலை வேறைநாடுகளிலை இருந்து அங்கைபோய் கலியாணம் கட்டுறவை அவை சொல்லுறதுக்கெல்லாம் தலையாட்ட வேண்டிக் கிடக்கெண்டுறான். அப்ப நீ காற்று நான் மரம் எது சொன்னாலும் தலையாட்டுவேன் எண்ட சினிமாப்பாட்டு நல்லபொருத்தமாத் தான் இருக்குது!

வரிசைகட்டிப் போறது அங்கை மட்டுமில்லை; இங்கையும் வரிசைகட்டித் தான் போகினம். ஆனா இரண்டு இடத்திலை ஊர்வம்பளக்க வெளிக்கிட்டதிலை பிடுங்குப்பாடு தொடங்கி, ஆனாலுக்கு தங்கட வீரத்தைக் காட்டி[?] கடைசியா கடைச்கண்ணாடியையும் உடைச்சுதங்கட வீரத்தை நிரூபிச்சிருக்கினம். அதிலை காட்டின உந்த வீரத்தை நாட்டிலை சிங்களவனிட்டை காட்டியிருந்தா, நாங்கள் ஏன் இப்பிடி நாடு விட்டு நாடோடி எங்கட சிறுமைகளை இங்கையுள்ள சனத்துக்கு வெளிச்சம் போட்டு காட்டப்போறம்? அதுக்கு எங்கை துணிவு வரப்போகுது... இப்

> இவர் அவருக்கு என்ன செய்தாரோ? கொண்டுவந்தது இவரைத்தானே. அதோட முடியேலை கொஞ்ச நேரத்திலை. வேறையொரு பிரச்சனையிலை ஈடுபட்டவையெண்டு இன்னும் ரெண்டுபேரை கொண்டு வந்திருக்கினம். அவையளும் எங்கட சனம்தானாம்.

நாய்க்கு நடுக்கடலுக்கை போனாலும் நக்குத்தண்ணி எண்ட மாதிரித்தான் எங்களுக்கு எங்கை போனாலும் பிரச்சினையளும்...,

நாட்டிலை இருக்கேக்கை பிரச்சினையள் தேடிவந்தது. இங்கை பிரச்சினையளை தேடிப்போய் விலைக்கு வாங்கிறது கூட்டங்களாத்தானே இருக்கிறோம். அதுக்காக நாமெல்லாரும் குடிபெயர்ந்தோம் தமனை அறிந்தோம் எண்ட வீராப்பு வசனங்கள் வேறை. எல்லாம் மப்பு இறங்கும் வரைக்கும்தான்.

இறங்கினாப் பிறகு...?

**அருமைத்தம்பி**

---

# துயர் பகிர்ந்த தூய உள்ளங்களை நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்




எங்கள் செல்வ மகள் நிதர்சினியின் மறைவால் நாம் ஆறாத்துயரில் மூழ்கி இருந்த வேளையில், அனைத்து வகையிலும் எங்கள் குடும்பத் துயரினை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் துயராக கருதி, கண்ணீருடன் உங்கள் உதவிக் கரங்களை எங்கள் கரங்களுக்கு ஆதரவாகவும், மனங்களுக்கு ஆறுதல் அளிக்கும் வண்ணம் இணைந்து நின்று ஒத்துழைப்புக்களை வழங்கியமைக்கும் எங்கள் இதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாக குசேன்வில் நகராட்சி மன்ற மேயர், சக உத்தியோகஸ்தர்கள், நிதர்சினியின் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பிரெஞ்சு பொலிஸ் அதிகாரிகள், வேர்சேயில் விசேட துப்பறியும் பொலிஸ் பிரிவினர், தொலைக்காட்சியினர், பத்திரிகையாளர்கள், வைத்திய அதிகாரிகள் (Hopital Necker), Restaurant L'Academie உரிமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் குசேன்வில் பகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்தினருக்கும், இத்துயரச் செய்தியினை துண்டுப் பிரசுரங்கள் மூலம் உடனுக்குடன் வெளியிட்ட நண்பர்களுக்கும், வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், அமைப்புகளுக்கும் அடக்கதினம் அன்று அனைத்து ஸ்தாபனங்களையும் மூடி கலந்துகொண்ட வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், இச் சோகச் செய்தியினை உலகெங்கும் அறியச் செய்த பத்திரிகைகளுக்கும், வானொலிகளுக்கும், குறிப்பாக பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, பிரான்ஸ் தமிழ் பெண்கள் அமைப்பு, ஈழமுரசு, ஈழநாடு, தமிழ் வானொலி - தொலைக்காட்சி நிறுவனம் (T.R.T. பிரான்ஸ்) அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (IBC லண்டன்), இரங்கும் இல்லம் (ஜேர்மனி), சுட்டுவிரல் (பிரான்ஸ்), மற்றும் எம்முடன் தொலைபேசியிலும் தொலைநகல் தந்திகள் மூலமும் அனைத்து நாடுகளிலிருந்தும் துயர் பகிர்ந்து ஆறுதல் வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும், இத்துயர வேளையில் இல்லந்தேடி வந்து தினமும் உணவு வழங்கி சேவை புரிந்தவர்களுக்கும், வாகனசேவை புரிந்தவர்களுக்கும், தேசம், மொழி, மதம் பாராது இறுதிச் சடங்கில் கலந்து மலர் தூவி அஞ்சலி செலுத்திய அனைத்து தேச மக்களுக்கும், அன்றைய தினம் தாக சாந்தி செய்து உதவிய நண்பர்களுக்கும், வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் மீண்டும் மீண்டும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்

சிறீதரன் - கமலா குடும்பத்தினர்

**செல்வி சிறீதரன் நிதர்சினி**



அன்னை மடியில்: 15.03.87

அநியாய அழிப்பில்: 12.02.99

# சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

போர்ன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 14.02.99 ஞாயிற்றுக்கிழமை மாலை திருப்பலியைத் தொடர்ந்து பங்குத் தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 20.12.98 அன்று நடைபெற்ற ஒளிவிழாவில் சேர்க்



கப்பட்ட 7000 சுவிஸ் பிராங்குகள் முறையே 1500 சுவிஸ் பிராங்குகள் மன்னார் மறைமாவட்டத்திற்கும், 1500 சுவிஸ் பிராங்குகள் மட்டு நகர் மறைமாவட்டத்திற்கும், 2000 சுவிஸ் பிராங்குகள் யாழ் மறை மாவட்டத்திற்கும் மிகுதி 2000 சுவிஸ் பிராங்குகள் போர்ன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் பராமரிப்பில் இருக்கும் மன்னார் தேவன்பிட்டி கல்வி வளர்ச்சிக்கும் அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அத்துடன் 99ம் ஆண்டுக்கான நிர்வாகத் தேர்வும் இடம் பெற்றது.


தலைவர்: திரு. விக்டர் அந்தோனிப்பிள்ளை, உபதலைவர்: திரு. ஜோசப் நாதன், செயலாளர்: திரு. ஞானசேகரம், பொருளாளர்: திரு. தேவராஜா (பாலன்), உப செயலாளர்: திரு. மத்தியூஸ், பாடல் குழுப் பொறுப்பாளர்: திரு. அலோசியஸ், தொடர்பாளர்: திரு. அருளானந்தம் (வின்சன்) ஆகியோர் தெரிவானார்கள். இறுதியில் பங்குத் தந்தையின் செபத்துடன் இந்நிகழ்வு நிறைவுபெற்றது.

20.12.98 அன்று நடந்த ஒளிவிழாவில் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசிற்குரிய இலக்கங்கள்:

1-ம் இடம் 02111
2-ம் இடம் 02929
3-ம் இடம் 00601

10 ஆறுதல் பரிசுகளுக்கான இலக்கங்கள் பின்வருமாறு:

1- 02839
2- 02781
3- 01903
4- 02659
5- 02137
6- 02822
7- 01071
8- 02696
9- 02671
10- 02867



# புகலிட நிகழ்வுகள்

## லியோனில் நடந்த தமிழர் கலந்துரையாடல்

பிரான்சின் பிரதான நகரங்களில் ஒன்றான லியோனில் கடந்த 27.02.99 சனி மாலை 4 மணிக்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அமைதி வணக்கத்துடன் ஆரம்பித்து, புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரச்சினைகள், தமிழீழப் போராட்ட நிலை, குறிப்பாக வன்னி மக்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சிக்கல்கள் பற்றியும் தமிழ்ச்சோலை கல்வி நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

லியோனில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வேலைத்திட்டங்களை ஆழப்படுத்துதல் பற்றி ஆராய்ந்த பின், தற்காலிக இடைக்காலக் குழு ஒன்றை அமைப்பது என்று முடிவாகியது.

ஏற்கனவே கடந்த 28.11.98 அன்று பாரிசில் வெளியிடப்பட்ட தமிழர் வரலாறு (Histoire de Eelam Tamoul) எனும் பிரெஞ்சு நூலை மீள லியோனில் வெளியிடுவது, சிறப்பாக லியோனில் ஒளிவிழா நடாத்துவதற்காக நடைபெறுகின்ற ஏற்பாடுகள் என்பன இந்த இடைக்காலக் குழுவின் வேலைகளில் முக்கியமானவையாக அறிவிக்கப்பட்டுள்ளன. இக்குழுவிற்கு திரு. லிங்கேஸ்வரன் பொறுப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## ஜேர்மனியில் ஓயாத அலைகள்-2 காண்பிக்கப்படும் இடங்கள்

| | | |
|---|---|---|
| UNION SERVKE KINO | GÖRLITZER BAHNHOF | ALTES FEUER WAHRHAUS SUD |
| Koln Kchener Str 156 | Zenghof Str 20 U-Bahn 1-15 | Mohringer Str 56, Stuttgart |
| 50183 Elsdorf | Berlin | 14.03.99 ஞாயிறு |
| 13.03.99 சனி, பிப. 1 மணி | 13.03.99 சனி, பகல் 12.30 மணி | மாலை 6 மணி |


# பிறைம் என்ரரென்மென்ட் வெளியீடு

படையப்பா

விரைவில்
CD, ஒடியோக்களில்

**PRIME AV INTERNATIONAL PTE LTD**
83, Genting Lane # 05-02
Al-Hamied Industrial Building
Singapore 349568
Tel: (65) 841 7140 Fax: (65) 841 7150
E-Mail: pyrsin@pacific.net.sg

**PRIME AV (MALAYSIA) SDE BHD**
11-0 11th floor, semua house
Jorong Bunus enam,
50100 Kuala Lumpur, Malaysia
Tel: (603) 4651191 Fax: (603) 4661192
E-Mail: tspyr@mol.net.my

**PRIME INTERNATIONAL LIMITED**
2nd Floor, Pyramid House
1, Martindale road, Hounslow west
Middlesex, United Kingdom
Tel: (0181) 5722070 Fax: (0181) 5725580
E-Mail: pyramid @dircon.co.uk

**PRIME AV (CANADA) INC**
6760 Davand Drive, Unit 1.
Mississauga, Ontario L 5 T 2I9, Canada.
Tel: 905-565-1152 - Fax: 905-565-1345
E-Mail: pyrcan@sympatico.ca

*Unauthrised public performance Broadcasting and copying of this recording is prohibited*




# ஜியானில் பொங்கல்விழா

கடந்த 20.02.99 சனிக்கிழமை மாலை 200 மணியளவில் ஜியான் தமிழ்ச்சோலையினரால் ஜியானில் நடாத்தப்பட்ட பொங்கல் விழாவை திருகிருஷ்ணா தனது துணைவியாருடன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார் அமைதி வணக்கத்தையடுத்து திரு.நக்மாங்கதன் அவர்களால் வரவேற்புரை வழங்கப்பட்டது. தமிழ்ச்சோலை மாணவர்களினால் தமிழ்ச்சோலைக் கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து பேச்சுக்கள், பாட்டுக்கள், கவிதைகள் பொங்கல் பற்றியும், வேறு விடயங்கள் குறித்தும் தமிழிலும், சில பிரெஞ்சிலும் அமைக்






கப்பட்டிருந்தன. ஜியான் தமிழ்ச்சோலை மாணவர்களால் வழங்கப்பட்ட காவடியாட்டம், நாட்




டியநாடகம், கோலாட்டம் போன்றவையுடன் பாரிஸில் இருந்து வருகை தந்திருந்த சார்சல் தமிழ்ச்சோலை மாணவி செல்வி சாமினா சாவேஸ்வரன், சோதியா கலைக்கல்லூரி மாணவி செல்வி (கா.1 கிளமென்ற்) ஆகியோரினதும், ஜியானுக்கு அண்மையில் உள்ள மொந்தார்ஜிஸ் என்னும் கிராமத்தில் இருந்து வருகை தந்திருந்த செல்விகள் தாட்சாயினி சின்னத்துரை, பிரவீனா லிங்கநாதன் ஆகியோரினதும் நடனங்கள் நிகழ்ச்சிக்கு மெருகூட்டின.

மேலும் ஜியான் நகராதிபதி திரு. Jean-Pierre-Hurtiger அவர்களும், ஜியான் மெனர்பிரா திரு. மிசேல் அவர்களும் பங்கேற்று இப்பொங்கல் விழாவைச் சிறப்பித்து உரையாற்றினர். இவ்விழாவில் பங்குபற்றுவதையிட்டு தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளும் வெகு விரைவில் தீர்ந்து தமிழீழம் மலரவேண்டும் எனவும், அப்படித் தமிழர்கள் தமிழீழத்திற்குச் செல்லும்போது அவர்கள் தம்மைப் பிரிவதையிட்டு தாம் கவலைகொள்வோம் என்றும் தமது உரையில் தெரிவித்தனர். இவர்கள் இருவரும் தமிழ்ச்சோலை நிர்வாகிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் பொறுப்பாளர் திரு. பாலசுந்தரம் அவர்களின் உரையின்பின் அவர் தமிழீழத்தின் வரலாறு (Histoire de Eelam Tamoul) என்னும் நூலை வெளியிட்டு வைக்க, ஜியான் நகரபிதா முதல் பிரதியைப் பெற்

றுக்கொண்டார். இந் நூலைப் பற்றிய விபரங்களை பாண்டிச்சேரியைச் சேர்ந்த சகோதரி செல்வி கருணாநிதி அவர்கள் விளக்கியிருந்தார்கள்.

தமிழ்ச்சோலையினர் திரவாகக் குழு உறுப்பினரும், ஆசிரியரான திரு.அருளானந்தம் அவர்கள் தமிழ்ச்சோலையின் வளர்ச்சி தேவை பற்றி விளக்கிப் பேசினார்.

நாடகம் மாணவர்களின் தமிழ் மொழி அறிவையும், உச்சரிப்புத் திறனையும் மிக அழகாக எடுத்துக்காட்டியதுடன் அனை வராலும் பாராட்டப்பட்டது. ஜியான் வாழ் தமிழ் மக்களுடன் பிரெஞ்சு மக்களும் வேற்று இன மக்களும் ரசித்த இந் நாடகத்தின் இறுதியில் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற பாடலை அனைவரும் ரசித்து கைகளைத் தட்டி தாளம் போட்டதைக் காணமுடிந்தது. நிகழ்ச்சிகள் தமிழிலும் பிரெஞ்சிலும் தொகுத்தளிக்கப்பட்டன. ஈசாக திருநாவுக்கரசு அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டதுடன் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெற்றன.

அதிக வேற்றுநாட்டு மக்கள் கலந்துகொண்ட இப்பொங்கல் விழா அவர்களுக்கேற்றவிதத்தில் அமைக்கப்பட்டிருந்தால் மேலும் அவர்களால் இரசிக்கப்பட்டிருக்கும். இனி வரும் விழாக்களில் கவனமெடுப்பார்கள் என்று நம்புகின்றோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் திரட்டப்பட்ட 'மடிப்பிச்சை' நிதியில் 1006F 10 கிடைக்கப்பெற்றது. இறுதியில் ஜியான் தமிழ்ச்சோலை மாணவர்களால் வழங்கப்பட்ட 'சூரிய நகர்' நாடகம் ...

# விடியலைத் தேடும் தமிழீழம்

உலகத் தமிழர் இயக்க கல்விப்பணி 1999ம் ஆண்டுக்கான தமிழ்த்திறன் போட்டிகளை தமிழாலய மாணவர்களிடையே நடாத்தவுள்ளது. இப்போட்டிகளில் ஜேர்மனியிலுள்ள சகல தமிழாலயங்களும் பங்குபற்றுகின்றன.

ஏழு பிரிவுகளாக 6 வயது முதல் 19 வயது வரையிலான மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். திருக்குறள் மனனம், பேச்சு, வாசிப்பு, சொல்வதெழுதல், உறுப்பமைய எழுதுதல், கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளில் மாணவர்களின் தமிழ்த்திறன் பரீட்சித்துப் பார்க்கப்படும். இவற்றில் திருக்குறள் மனனப்போட்டி (மொத்தம் அதிகாரம் உட்பட) பங்கேற்றோர் தகுதிபெற்ற வயதுப் பிரிவுகளின்படி நான்கு போட்டிகளில் மாத்திரமே ஒவ்வொரு மாணவரும் பங்குபற்றலாம்.

தமிழாலயங்களில் நடைபெறும் தெரிவுப்போட்டி, மாநிலத் தெரிவுப்போட்டி, ஜேர்மனி தழுவிய இறுதிப்போட்டி என மூன்று பிரிவுகளில் போட்டிகள் நடைபெறும். இவற்றில் தமிழாலயங்களுக்கு இடையேயான போட்டிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. ஏனைய போட்டிகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தமிழாலயங்கள் ஒவ்வொன்றும் தெரிவுப் போட்டிகளை நடாத்தி ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்களை 02.04.99 க்கு முன்னர் உலகத்தமிழர் இயக்க கல்விப் பணிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தமிழாலயத் தெரிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாவது இடத்தைப்பெற்ற மாணவர்கள் மாத்திரமே மாநிலப்போட்டியில் பங்குபற்றுவர். மாநிலப் போட்டியில் முதல்மூன்று இடங்களைப்பெறும் மாணவர்கள் ஜேர்மன் தழுவிய இறுதிப் போட்டியில் பங்குபற்றுவர்.

கவிதைப்போட்டியில்: 14-19 வயதுப் பிரிவினர் மாத்திரமே பங்கு பற்றலாம். இதில் பங்குபற்றுவோர் 'விடியலைத்தேடும் தமிழீழம்' என்ற தலைப்பில் 24 வரிகளில் கவிதை வாசித்தல் வேண்டும். திருக்குறள் போட்டியின்போது நடுவர் கேட்கும் குறள்களுக்கும் பொருள் கூற வேண்டும்.

தமிழாலயப்போட்டி, மாநிலப்போட்டி ஆகியவற்றில் பங்குபற்றி, முதல்மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும், ஜேர்மனி தழுவிய இறுதிப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப்பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

# செஞ்சோலை மாலை

பிரான்ஸ் தமிழ்ப்பெண்கள் அமைப்பினரின் செஞ்சோலை நிலையினரால் கடந்த 21.02.99 ஞாயிறு மாலை நடாத்தப்பட்ட 'செஞ்சோலைமாலை' கலை நிகழ்ச்சிகள் அநேகமான நிகழ்ச்சிகள் போலவே ஒன்றுமையுடன் நேர காலதாமதத்துடன் ஆரம்பமாகின. அமைதி வணக்கத்தையடுத்து தமிழ்ப் பெண்கள் அமைப் பின் பொறுப்பாளரினால் மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து பாட்டுகள், பேச்சுக்கள், கவிதைகள், நடனங்கள் என்பனவற்றை செவ்ரோன் தமிழ்ச்சோலை மாணவ மாணவிகள் வழங்கியிருந்தனர். இருவர்ணும் உமிழ்ப்பள்ளி மாணவர்களினால் ஒரு பாடல் வழங்கப்பட்டிருந்தது. தமிழ் விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளரின் சிறப்புப் பேச்சு தவிர்க்க முடியாத காரணங்களினால் இடம்பெறவில்லை. ஒப்பெலே வில் தமிழ்ச்சோலை மாணவர்களால் வழங்கப்பட்ட 'நிலைத்திருப்பு' சிறுவர் நாடகம் வித்தியாசமான உருவக நாடகமாக அமைக்கப்பட்டிருந்தது. 'நிலவுக்கு ஓருநாள் போவோம். நிலவில் கவிதைகள் வடிப்போம். நிஜம் இந்த வெல்வோம்' என்னும் நம்பிக்கையுடன் நிறைவு பெற்ற இந்நாடகத்தில் நடித்த சிறுவர்கள் அனைவருடனும் நெறிப்படுத்தியவர்களும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். தமிழ்ச்சோலை மாணவிகளினால் வழங்கப்பட்ட நாட்டிய நாடகத்தின் கரு இன்றைய கால எல்லைகளைத் தாண்டி இருந்ததுடன், குறிப்பிட்ட ஒரு இனத்தின் பெயரைக் கூறியது மிகவும் நெருடலாக இருந்தது. இனிவரும் நிகழ்ச்சிகளிலாவது இப்படியான விடயங்களில் ஆழ்ந்த கவனம் செலுத்தவேண்டியதை நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கருத்தில்கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் பல படிக்கட்டுகளைத் தாண்டி வந்தபின்பும் இப்படியொரு கரு தேவைதானா?

தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் வழங்கப்பட்ட 'போலிகள்' நாடகம் நிறைவு பெற்றதாக உணரமுடியவில்லை. இந்நிகழ்ச்சி நுழைவுச் சீட்டில் திரட்டப்பட்ட நிதியான 15,000 பிராங்குகளைப் பெற்றுக் கொண்டு செஞ்சோலைப் பொறுப்பாளர் உரையாற்றுகையில், புலம்பெயர்ந்த பெண்களின் கடமைகளை வலியுறுத்தி அனைவரும் விடுதலைப் போராட்டத்தில் இணைய வேண்டிய தேவையைப் பற்றிக் கூறினார். செஞ்சோலையைப் பற்றியும் கொஞ்சம் விளக்கிருக்கலாம். பாரிசில் படுகொலை செய்யப்பட்ட நிதர்சினியின் கொலையை தமிழ்ப் பெண்கள் அமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்தார். தன் நிகழ்வைத் தொடர்ந்து தமிழீழம் இசைக்குழுவினரால் வழங்கப்பட்ட இசை நிகழ்வில் பாடிய சிறுவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். குறிப்பாக குட்டிப்பையன் பலரினது பாராட்டையும் பெற்றுக்கொண்டான்.

இவ் இசை நிகழ்ச்சியில் பங்குபற்றிய அனைவரும் நிதர்சினியின் படுகொலையைக் கண்டிக்கும் முகமாக கைகளில் கறுப்புப்பட்டி அணிந்து பங்கேற்றிருந்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் திரட்டப்பட்ட மடிப்பிச்சையின்போது நிதி சேர்க்கப்பட்டன. நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெற்றன.

## குருநகர் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம்(பிரான்ஸ்)


## 1999_ம் ஆண்டு புதிய நிர்வாகிகள்

கடந்த 28.02.99 ஒபவில்லியேர்ஸ் மாரியம்மா கோவில் மண்டபத்தில் நடைபெற்ற பிரான்சில் இயங்கிவரும் குருநகர் சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் 1999ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

தலைவர்: குருசுமுத்து பீலிக்ஸ், உபதலைவர்: டேமியன் குரி
செயலாளர்: அந்தோனிப்பிள்ளை மைக்கல் ஆஞ்சலோ
உப செயலாளர்: இமானுவல் அன்ரன்
பொருளாளர்: இமானுவல் சிலுவை தாசன் (பத்தன்)
ஆலோசகர்கள்: மத்தியாஸ் சுரேன், அலெக்சாண்டர் குமார்
கணக்காளர்: குலசிங்கம் விகான்
நிர்வாகிகள்: எமிலியாநூஸ் ஜோய், பவுலப்பர் ஜோகனதாஸ், இமானுவல் ஜஸ்ரின்


# நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
தொலைபேசி: 0148050214
0613342518
0607348051
0148385825

# ஆசிய இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் எதிர் சிறீலங்கா

[illegible]





அர்னொல்ட்

[illegible]

# தென்னாபிரிக்க ஓட்டச்சாதனையை ஓரம்கட்டிய முடிவு

[illegible]



[illegible]

# 400 விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது வீரர்

[illegible]

1. கபில் தேவ் (Ind) 434
2. றிச்சட் ஹட்லி (Nz) 431
3. கோட்னி வோஸ் (Wi) 400
4. இயன் போத்தம் (Eng) 383
5. மல்கம் மாசல் (Wi) 376
6. வசிம் அக்ரம் (Pak) 368
7. இம்ரான்கான் (pak) 362
8. டென்னிஸ் லில்லி (Aus) 355
9. கட்லி அம்புறுஸ் (Wi) 350

# தமிழர் விளையாட்டு விழாவின் 'TOP SIX' கிரிக்கெட்போட்டி

[illegible]

Tamil's Sports
Postfach -753, 8302 Kloten
Tel: 079-3439[illegible] / 076-3150966

## கிரிக்கட்

1999ம் ஆண்டு கோடை காலத்தில் பிரித்தானியாவில் நடைபெற உள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படும் வீரர்கள் சிலரை வாரத்திற்கு ஒருவர் வீதம் அறிமுகம் செய்யும் வரிசையில் அடுத்து வருபவர் சிறீலங்கா அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமின்டா வாஸ்.

### சமின்டா வாஸ் (Chaminda vaas)



[illegible] 'Colts Cricket Club' [illegible] 1993/94 [illegible]

- பொன். தாமோதரம்


ஈழத் தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனம் - பிரான்ஸ் ஆதரவில்

தாய்நாட்டில் இயங்கிவரும் 'செஞ்சோலை' சிறுவர் பராமரிப்பு திட்ட நிதிக்காக

தமிழ்ப் பெண்கள் அமைப்பு - பிரான்ஸ் நடாத்தும்

5 பேர் கொண்ட உள்ளரங்க உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

14.03.1999 ஞாயிறு காலை 9.00 மணி
Centre Sportif des Fillettes
54 bis, Boulevard Ney, 75018 Paris.
Mo: Porte de Lachapelle


# Karthigan c@ll

## குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பைப் பெற்று அமோக விற்பனையில் நடைபோடுகின்றது.

# கார்த்திகன் கோல்

**வெளிவருகிறது**

மார்ச் மாதம் 1-ம் திகதி முதல் Karthigan C@ll Telephone Card. கனடா உட்பட ஐரோப்பா எங்குமிருந்தும், சர்வதேச நாடுகளுக்கான அனைத்து தொடர்புகளையும் இலவச இலக்கம் மூலம் (Free Number) தொடர்பு கொள்ளலாம்




*Karthigan C@ll*

*International Telephone Cards*
*47, Rue de Lachapelle,*
*75018 Paris, France.*
**Tel:- 00-33-140344095**
**Fax:- 00-33-140344124**

வர்த்தகர்களுக்கு -20% கழிவும் கடனுதவியும் வழங்கப்படும்.
(காசோலை உத்தரவாதமாக ஏற்றுக்கொள்ளப்படும்)

* விநியோகஸ்தர்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

குறிப்பு-Karthigan C@ll, France Telecom உடன் இணைந்து செயற்படுகிறது.

**பிரான்ஸ்**

**Karthigancall**
**France**
T.P: 33(1) 40344095
Fax: 33(1) 40344124

**100F Cart**
**50F Cart**
இலங்கை - 50M
ஐரோப்பா - 120M
இன்னும் பல நாடுகள் மலிவு, தெளிவு

**ஜேர்மனி**

N° Vert: 08001824578
T.P: 02161208365
Fax: 02161809895

50 DM- வர்த்தகர்களுக்கு
30 DM- 15% -20%
20 DM வரை கொமிஷன் வழங்கப்படும்.




**இத்தாலி**

N° Vert: 800791103
T.P: 033386120861/ 02798727
Fax: 029413231

40 Li - வர்த்தகர்களுக்கு
20 Li - 20%-22% வரை
கொமிஷன் வழங்கப்படும்.




**சுவிஸ்**

**Karthigancall**
**Switzerland**

**50SF -**
**30SF** - வர்த்தகர்களுக்கு
**20SF** - 18 %-20%
கொமிஷன் வழங்கப்படும்.

**பிரான்சின் முன்னோடி தொலைபேசி அட்டையான கார்த்திகன் கோல் இப்பொழுது ஜேர்மனி, இத்தாலியில் அமோக விற்பனையில்! ஏனைய நாடுகளுக்கான விளக்கம் அடுத்த பத்திரிகையில்**

**UK - Canada - Norvay - Denmark - Holland** ஆகிய நாடுகளுக்கு மார்ச் மாத நடுப் பகுதியில் ஆரம்பமாகவுள்ளது. பிரான்சின் முன்னணி தமிழ்தொலைபேசி நிறுவனமென மக்களால் அழைக்கப்படும் கார்த்திகன் கோல் சர்வதேச தொலைபேசி அட்டை பங்குனி 1-ம் திகதிமுதல் ஐரோப்பா முழுவதும்...

*இன்னும் பல நாடுகளின் தொடர்புக் கட்டணங்களை மிகக் குறைந்த விலையில் தருகிறோம்.*

Pub

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.56 | 1.59 | 0.17 | 0.69 |
| பிராங்பேட் | 1.77 | – | 2.83 | 0.30 | 1.26 |
| லண்டன் | 0.62 | 0.35 | – | 0.10 | 0.43 |
| பாரிஸ் | 5.94 | 3.35 | 9.50 | – | 4.24 |
| சூரிச் | 1.44 | 0.79 | 2.32 | 0.23 | – |
| பம்பாய் | 42.83 | 24.18 | 68.02 | 7.21 | 29.57 |
| கொழும்பு | 69.56 | 39.27 | 111.15 | 11.71 | 48.03 |

# செம்மணி விசாரணைகளில் புதிய நீதிபதி

(07.03.1999)

. செம்மணி புதைகுழி தொடர்பான வழக்கில் இதுவரை நீதிபதியாக கடமையாற்றிய யாழ் மாவட்ட நீதிபதி ஏ.ஈ ஏகநாதனுக்கு பதிலாக சிறிலங்கா நீதிச்சேவை ஆணைக்குழு புதிய நீதிபதியாக என்.அருள்சாகரனை நியமித்துள்ளது. இந்த நியமனம் கடந்த இரண்டாம் திகதி மேற்கொள்ளப்பட்டது. தமிழீழ நீதிச் சேவையினால் யாழ் மாவட்ட நீதிமன்றங்களுக்கு விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களினால் யாழ். நீதிமன்றத்தை தொடர்ந்தும் இயங்க வைக்க முடியாதென ஏகநாதன் அறிவித்ததை அடுத்தே இப்புதிய நியமனம் இடம்பெற்றுள்ளது.

புதிய மேலதிக நீதிபதியாக பொறுப்பேற்ற அருள்சாகரன் கடந்த ஐந்தாம் திகதி யாழ். நீதிமன்றத்தில் செம்மணி தொடர்பான வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். நீதிமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், நீதிமன்ற கட்டடங்களும் சுற்றாடல்களும் இராணுவத்தினரால் பலமாக சோதனையிடப்பட்டன. அத்துடன் நீதிமன்றத்தினை சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்பு இடப்பட்டிருந்தது.

கிருசாந்தி குமாரசாமியின் படுகொலை தொடர்பான ஆரம்ப விசாரணைகள் நீதிபதி அருள்சாகரின் முன்னிலையிலேயே இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் 100 தமிழர்கள் கைது

(08.03.1999)

கண்டி நகர் பகுதியில் பொலிசார் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பல வீதிகளை மூடி சோதனைச்சாவடிகளை அமைத்த பொலிசார் பாதசாரிகளையும், வணிக நிலையங்களில் பணி புரிபவர்களையும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர். இதன்போது நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டு நிரைநிரையாக பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

# வேலணையில் பாலியல் வன்முறை

(08.03.1999)

வேலணை கருவில் பகுதியில் 13 வயதான தமிழ்ச் சிறுமி ஒருவரை சிறீலங்கா கடற்படையை சேர்ந்தவர்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முனைந்தனர். தன் மீது வன்முறையை புரிய முனைந்தவர்களை கடித்தும், அவலக்குரல் எழுப்பியும் விரட்டிய இச் சிறுமி அவர்களிடம் இருந்து தப்பிவிட்டார்.

தனது வீட்டுத் தோட்டத்தில் காய்கறி பறிக்கச் சென்ற வேளையில் அங்கு பதுங்கியிருந்த கடற்படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்ட இச்சிறுமி மறைவிடம் ஒன்றிற்கு இழுத்துச் செல்லப்பட்டார். அவ் மறைவிடத்திலேயே கடற்படையினர் வன்முறை பிரயோகத்தினை மேற்கொள்ள முற்பட்டுள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

**சிறிலங்கா.....**

பற்றி பேரணியில் கலந்து கொண்டவர்கள் கண்டனம் தெரிவித்ததுடன் சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்

(32ம் பக்கத் தொடர்ச்சி)

**அமெரிக்க.....**

இரு தரப்பு விவாதங்களையும் செவிமடுத்த நீதிபதிகள் பல்வேறு அமெரிக்க சார்பு கெரில்லா அமைப்புக்களை பயங்கரவாதிகள் என அமெரிக்கா கருதுகின்றதா எனக் கேட்ட பொழுது, அவை பயங்கரவாதிகளாக இருந்தாலும் அமெரிக்க வெளிவிவகார கொள்கையின் நிமித்தம் அவற்றை அவ்வாறு பிரகடனம் செய்யவில்லை என சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இவ் வழக்குமீதான தீர்ப்பு இரு மாதகாலத்திற்குள் வழங்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

**புளொட்.....**

ளியில் இருந்து யாழ்நகர் திரும்பியவர் என தெரிவிக்கப்படுகிறது. இவரை யாழ். வைத்திய சாலையிலும் கஸ்தூரியார் வீதியிலும் புளொட் குழுவினர் தேடிவருகின்றனர்.

புளொட் குழுவிற்கு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கண்டனக்குரல் எழுப்பியதை அடுத்து இக்குழுவை தாம் கட்டுப்படுத்தி விட்டதாக இராணுவம் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

மலர்வு: 13.12.1934



மறைவு: 02.03.1999

### கந்தையா உலகநாதன்

(கல்லை வேம்படி - சுழிபுரம்)

ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர்


தமிழீழம் (யாழ்.) சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்சில் வசித்து வந்தவருமாகிய கந்தையா உலகநாதன் அவர்கள் 02.03.99 அன்று பாரிசில் காலமானார். இவர், காலஞ்சென்ற சுழிபுரம் கந்தையா மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற சிறுநகரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலேந்திரன் (சுழிபுரம்), குலகுமாரி (லீலா), சாந்தகுமாரி, சுரேந்திரரத்தினம் (ரவி), நளினகுமார், விஜயரத்தினம் (விஜி), ஜெயரட்ணம் (ராசு), சந்திரகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சந்திரிகா (உடுவில்), சண்முகலிங்கம் (சண்), தேவராஜா, சசிகலா, சிறீராமச்சந்திரன், ரஜனி, எறிணா, பதமராசா (செட்டி-பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுப்பிரமணியம் (மலேசியா) சிதம்பரப்பிள்ளை, ராசாமணி (சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி சிதம்பரநாயகி கந்தையா (பிரான்ஸ்), காலஞ்சென்ற கந்தையா, நிமலவதி, காலஞ்சென்ற இரத்தின சபாபதிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, புனிதவதி, வள்ளிநாயகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.03.1999 வியாழக்கிழமை 12.30 மணியளவில் 93 Rue Marcel-Sembat, 93430 Villetaneuse, Saint Denis என்ற முகவரியில் உள்ள மயானத்தில் நடைபெறும்.

**தகவல்:** மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
21 Avenue de Londres, 95380 Louvres, France.
Tel: 01 34 21 86 81 / 06 82 00 51 62

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு: 02.02.1928



இறப்பு: 09.02.1999

### அமரர் திரு. இராமநாதன் செல்வரட்ணம்

(குமாரசாமி) - புங்குடுதீவு 8-ம் வட்டாரம்
(திருகோணமலை அனுராதபுரச் சந்தி ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

09.02.1999 அன்று இறைவனடி சென்றடைந்த எங்கள் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியும், இரங்கலுரை நிகழ்த்தியும், மலரஞ்சலி செலுத்தியும், உள்நாட்டு வெளிநாடுகளிலிருந்து தொலைபேசியில் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், இறுதிச்சடங்கு ஒழுங்குகளை மேற்கொண்டும் நாம் கலங்கி நின்றவேளை எமக்கு பக்கபலமாக இருந்து இன்னோரன்ன உதவிகளையும் செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**திதி: 11.03.1999 (வியாழன்)**

ஞாயிறு 14.03.1999 உற்றார் உறவினரின் 'நீத்தார் பெருமை' கூறப்படும்.

தகவல்: கண்ணன் (சுவிஸ்) 081-6516046

காயத்ரீ




210, Rue du Fbg. St. Denis,
75010 Paris.
Tel: 01 42 09 22 43 - Fax: 01 46 07 09 34

அனைத்து மீன் வகைகளும் மரக்கறி வகைகளும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

KING Telecom
தமிழீழம் இலங்கை இந்தியா
Local 45 N° Vert 32 நிமிடம்
King தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்
92, Rue de Belleville, 75020 Paris (M° :Pyrénées)
Tel.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96
33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tel:03 44 55 41 59 Fax: 03 44 55 42 51
www.kingtelecom.com.




# அமெரிக்க நீதிமன்றத்தில் இறுதிக்கட்ட விவாதம்

(08.03.1999)

அமெரிக்க இராஜாங்க அரசின் தடையுத்தரவுக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கல் செய்த மனு மீதான இறுதிக் கட்ட விவாதங்கள் கடந்த வெள்ளியன்று கொலம்பிய மாவட்ட நீதிமன்றத்தில் முடிவுற்றது. தீர்ப்புக்கான திகதி குறிப்பிடப்படாது விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றத்தின்முன் விடுதலைப் புலிகள் சார்பில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் நிர்வாகத்தை சேர்ந்த சட்டமா அதிபர் ராம்சே கிளார்க் இறுதி விவாதங்களை முன்வைத்தார். அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மெடலின் அல்பிரைட் செஞ்சிலுவை சங்கத்தையும் சாதாரணமானவர்களையும் பயங்கரவாதிகள் எனக் கூறவேண்டுமானால் கூறட்டும் என்றார். எனினும் அவ் நடவடிக்கையை நியாயப்படுத்த நீதித்துறையை பயன்படுத்தக் கூடாது எனத் தெரிவித்த ராம்சே கிளார்க் தொன்மையான நாகரிகத்தைக் கொண்ட தமிழர்கள் தமது சுய நிர்ணய உரிமைக்காகவும், சுய கௌரவத்திற்காகவும் போராடுகின்றார்கள் எனவும் அவர்கள் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அமெரிக்க நீதிமன்றத்தின் முன் வந்துள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்க அமைப்பின் சார்பில் வாதாடிய சட்டத்தரணி சனிக்கா, விடுதலைப் புலிகள் அமைப்பு பிற நாட்டைச் சேர்ந்தது என்பதால் அவர்களுக்கு அமெரிக்க சட்ட முறைகளுக்கு உட்பட்ட சந்தர்ப்பங்கள் கிடையாது எனவும் இராஜாங்க அமைச்சினால் தொகுக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலேயே புலிகளை தடை செய்தார் எனவும் கூறினார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## அனைத்துலக பெண்கள் தினம்




தன் கணவனை செம்மணியில் தேடும் தமிழீழப்பெண்

## கிழக்கு கடலில் ஆயுதக் கப்பல்

(08.03.1999)

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்தவாரம் புலிகளின் மற்றுமொரு ஆயுதக்கப்பல் நடமாடியதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. சில தினங்களின்று முன்னர் இரவு வேளை நன்றில் கிழக்கு கரையோரமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த படகுகள் இக் கப்பலை கண்ணுற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. பல சிறிய படகுகள் தொடர்ச்சியாக கப்பலில் இருந்து பொருட்களை இறக்கி கரைகளுக்கு எடுத்துச் சென்றதாகவும், கப்பலில் இப் பணிக்காக 'கிறேன்' பாவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இம் மீன்பிடிப் படகுகள் கப்பலை அண்மித்து செல்ல முற்பட்டபொழுது கப்பலின் மேற்தளத்தில் நின்றிருந்த ஆயுதம் தரித்த பாதுகாவலர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்ததாக மீனவர்கள் கூறியுள்ளனர்.

தகவல் அறிந்து திருமலை கடற்படைத் தளத்தின் வேக பீரங்கிப்படகுகளும் கண்காணிப்பு விமானங்களும் அப் பகுதிக்கு சென்றபோது அங்கு அக் கப்பல் தென்படவில்லை என கூறப்படுகின்றது.

- சண்டே ரைம்ஸ்

## புளொட் முகாமில் இருந்து இளைஞன் தப்பினான்

(08.03.1999)

யாழ். நகரின் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள புளொட் முகாமில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞன் ஒருவர் அங்கிருந்து தப்பியோட்டம் பிடித்துள்ளான். சதானந்தம் ரவிச்சந்திரன் என்னும் இளைஞரே நேற்று மதியம் புளொட் முகாமில் இருந்து தப்பியவராவார். இவர் அண்மையிலேயே வள்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## 'சிறீலங்கா இராணுவமே வெளியேறு' கிளிநொச்சியில் மக்கள் பேரணி

(08.03.1999)

சிறீலங்கா இராணுவத்தின் அராஜக நடவடிக்கைகளையும், அரசின் நிர்வாக நிறுத்தத்தையும் கண்டித்து கிளிநொச்சி மக்கள் பெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

கடந்த 6ம் திகதி இப் பேரணி நடாத்தப்பட்டுள்ளது. கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கச் சந்தியில் இருந்து ஆரம்பமான இவ் ஊர்வலம் கந்தசுவாமி கோவில் சந்தி வரை நடைபெற்றுள்ளது. இவ் ஊர்வலத்தில் பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு சிறீலங்கா அரசிற்கு எதிராக தமது கண்டனத்தை தெரிவித்தனர்.

பேரணியின் முடிவில் முறையீட்டு மனு ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரியவருகிறது. சிறீலங்கா அரசின் பல்வேறு வடிவத்திலான ஒடுக்குமுறைகள்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

பாரிஸ் லாசப்பலில்
தர்ஷனா உணவகம்



நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்
23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41